REGISTERED No. M. 6165. 51/3-54 அணா 2

51

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஜூலை 1954

19 JUL 1954
MADRAS


| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| மனித சமூகத்தின் மகா பண்பாடு | 1 |
| திருக் குர் ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) | 7 |
| ஹாத்திம் மகள் (டி. எப். ஆர். மஆலி சாஹிப் பாகவி) | 11 |
| இரத்தச் சின்னம் (தொடர் கதை) | 21 |
| ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா சரித்திரச் சுருக்கம் (அய்யப் பேட்டை S. அப்துல் ரஜாக் சாஹிப்) | 29 |


...ல் இஸ்லாம் ஆபீஸ்:
...நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
Q7m211, N24F1
N54.
187032

# பத்ஹுால் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–8–0
தனிப் பிரதி அணா. 0–2–0
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்குஎழுதவும்.

மானேஜர்,
பத்ஹுால் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


## உர்து ஆஸான்.

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள எதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக்கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்லீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூ. 2—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுால் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்.

## ஜுலை—1954.

## மனித சமூகத்தின் மகா பண்பாடு.

விசாலமான தோட்டம், அழகான பூங்காவனம், கண் கவரும் காட்சி, எல்லாம் பொருந்தியதாய் இருக்கிறது ஒரு நிலம். அந்த நிலம் ஓரே பிரதேசத்தைச் சேர்ந்ததே. அதன் மண்ணெல்லாம் ஓரே விதமானதே. அதன் நிறமும் ஒன்றே; நிலத்தின் அமைப்பும் ஓரே விதமானதே. அந்த தோட்டத்திற்குப் பாயும் தண்ணீரும் ஓரே விதமானதே.

தோட்டத்தில் பற்பல விதமான மரங்கள் உண்டு, செடிகள் உண்டு, கொடிகள் உண்டு; மாமரம், பலாமரம், கொய்யா மரம், நாரத்தை மரம், நாவல் மரம், தென்னை மரம், பனை மரம் எல்லாம் உண்டு. எலிமிச்சம் செடியும் உண்டு, மாதுளைக் கனிதரும் செடியும் உண்டு.

இங்ஙனம் ஓரே தோட்டத்தில், ஓரேவித மண்ணில், ஓரேவித சிதோஷ்ணத்தில் இத்தனை விதமான மரங்களும் செடிகளும், விதவிதமான புஷ்பங்களும், கனிகளும் உண்டாகின்றனவே எப்படி என்று நாம் யோசித்துப் பார்க்கிறோமா ?

மாம்பழம் மணமாய் மதுரமாய் இருக்கிறது, எலிமிச்சம் புளிக்கிறது, பாவற்காய் கசக்கிறது, கரும்பு இனிமையா யிருக்கிறது; வேப்பத் தளிர் கசக்கிறது, அதன் கனி இனிக்கிறது. இதென்ன விந்தை? ஓரே மரத்தில் இரண்டு விதக் குணங்கள். மாங்காய் புளிக்கிறது, மாம்பழம் இனிக்கிறதே இது என்ன புதுமை.

வானத்திலிருந்து பெய்யும் மழை, எல்லா மரஞ் செடிகட்கும் ஒரே விதமாய்த் தான் பெய்கிறது. மழைத் தண்ணீரின் நிறம் ருசி எல்லாம் ஒரே விதமாகத் தான் இருக்கிறது. எட்டி மரத்துக்குப் பெய்யும் மழை நீர் கசப்பாகவும், கரும்புத் தோட்டத்துக்குப் பெய்யும் மழை நீர் இனிப்பாகவும் இருப்பதில்லை. எல்லா மழை ஜலமும் ஒரே விதம் தான. சூரிய கிரணங்களின் உஷ்ணமும் கிரணச் சுடரும் ஒரே மாதிரியாகத்தான், எல்லா மரஞ் செடிகள் மீது படுகின்றது. நிலா ஒளியும் ஒரே மாதிரியாகத்தான் குளிர்ச்சியை அளிக்கிறது.

நெல், கோதுமை, கம்பு, கேழ்வரவு விளையும் நிலங்களைப் பார்த்திருப்பீர்கள். ஒரே ஏரியின் நீர் தான் நெல வயலுக்கும் மற்ற நிலங்களுக்கும் கிடைக்கின்றது. ஆனால் விதவிதமான தானியங்கள் உண்டாகின்றன. மண்ணில் வித்தியாசமில்லை. தண்ணீரில் வித்தியாசமில்லை. காற்றில் வித்தியாசமில்லை. சூரிய சந்திர ஒளியில் வித்தியாசமில்லை. ஆனால் பூமியிலிருந்து விளையும் பொருட்களில் மட்டும் அபரிமிதமான வித்தியாசம். இது ஏன் ?

ஒரே நிலத்தில் விளையும் மரங்களும் செடிகளும் கொடிகளும், தங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றனவா? ஒன்றில் இனிமையும், மற்றொன்றில் கசப்பும், வேறொன்றில் புளிப்பும் உண்டாவதற்குக் காரணம் என்ன? தனக்குத் தானே அப்படி தனிப் பண்பாடை அமைத்துக் கொள்கின்றனவா ? இந்த குணப்பாடும் வேறுபாடும் இவைகளுக்குள் எப்படி உண்டாகின்றன?

## இயற்கை வாதம் வீண் !

ஆண்டவனை மறந்து, இறைவனின் சக்தியை மறந்து, பரம் பொருளை மறந்து, மனம்போனபடி யெல்லாம் நாஸ்திக வாதமும் இயற்கை வாதமும் பேசும் விதண்டாவாதிகள், இக்காலை எங்கும் மலிந்துப் போய் இருக்கிறார்கள். அவர்களிடம் கேட்டுப் பாருங்கள், இந்த தெய்வீகப் பண்பாடுகளைப் பற்றி ! அவர்கள் என்ன சொல்கிறார்கள், தெரியுமா ?

“ எல்லாம் இயற்கையே, எல்லாம் அதன தன் அமைப்பின் படியே உண்டாகின்றன. ஒரு வித்துக்குள் அது எப்படிப்பட்ட கனியைத் தரவேண்டும், எத்தகைய தோற்றம் பெற வேண்டும் என்ற தன்மை உண்டாகியிருக்கிற” தென்று வாதாடுகிறார்கள்.

ஆம் ! இயற்கைத் தன்மையில், மகா சக்தியும் குணப் பண்பாடும் அமைந்திருக்கிற தென்பது வாஸ்தவமே. அந்த மகாத் தன்மையையும் விசித்திர குணப் பாட்டையும் அமைத்து வைப்பவர் யார் ? இதை அந்த இயற்கைவாதிகள் யோசித்து உணர்ந்து பார்க்க வேண்டும்.

13032

ஒரு வித்திலிருந்து ஒரு பெரிய பிரம்மாண்டமான ஆலமரம் உண்டாகிறதே, அதெப்படி? ஒரு வித்தை எடுத்துப் பிளந்து பாருங்கள். அதற்குள் கிளையோ, கொம்போ, இலையோ, பூவோ, கனியோ அல்லது அதன் அடையாளங்களோ ஏதேனும் இருக்கிறதா? இல்லவே இல்லை. அங்ஙன மிருக்க, அத்துணைப் பெரிய விருக்ஷம் உண்டாக வேண்டுமென்ற தன்மையை உண்டாக்கி வைத்த மகாசக்தியே ஆண்டவனின் குத்ரத் ஆகும்.

இறைவன் இல்லை என்று சுலபமாக வாதாடி விடலாம். எல்லாம் இயற்கைப்படி உண்டாகின்றன வென்று சொல்லி விடலாம். ஆனால் அந்தத் தத்வத்துக்குள் நுழைந்து ஆராய்ந்துப் பார்க்கும் போது தான் அதன்கண் பரம்பொருளான குத்ரத்தும் ரகசியமும் அமைந்திருக்கிறதென்பது அறியப்படுகிறது.

## பகுத்தறியும் தன்மை!

பகுத்தறியும் தன்மை மனிதர்களுக்கு ஆண்டவனால் அருளப்பட்ட ஒரு அரும் பெரும் பாக்கியம். மனிதன் தான் எதையும் ஆராய்ந்து பார்க்கும் குணம் உடையவனாக இருக்கிறான். சூரிய ஒளி ஏன் உஷ்ணமாய் இருக்கிறது; சந்திர ஒளி ஏன் குளிர்ச்சியாய் இருக்கிற தென்பதை மனிதன் தான் ஆராய்ந்து பார்க்கிறான். சூரியன் இருக்கும் போது சந்திரன் இருப்பதில்லையே, பூரணச் சந்திரன் ஒளி தரும் போது நக்ஷத்திர ஒளி மங்கிப்போகின்றனதே. இதற்குக் காரண மென்ன வென்பதை மனிதன் பகுத்துணர்ந்து பார்க்க முடியும்.

மனிதன் ஆதி காலந் தொட்டு இத்தகையை இயற்கைப் பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அநேக அபூர்வங்களைக் கண்டு பிடித்துள்ளான். மனித அறிவாற்றலினால் உலகம் அடைந்துள்ள நன்மைகள் எண்ணில் அடங்காததாகும். வானத்தில் உலாவும் சூரிய சந்திர நட்சத்திரங்களைப் பற்றி மட்டுமல்ல, இந்தப் பரந்த பூமி மீது சர்வ சாதாரணமாய் முளைக்கும் மரஞ் செடி கொடிகளிலேயே ஆயிரம் ஆயிரம் அற்புதங்கள் இருக்கின்றன. "இதை யெல்லாம் ஆராய்ந்து பாருங்கள்" என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும்.

ஆராய்ந்துப் பார்க்கும் விதத்தைப் பற்றி இஸ்லாமியத் திருவேதமாகிய குர்ஆன் ஷரீப், நமக்கு அரும் பெரும் உதாரணங்கள் மூலம் போதித் திருக்கிறது. மனிதருடைய தன்மைக்குத் தக்க முறையில் இறைவன் தன் திருமறையில் சுலபமான வழிகளில் பெரிய தத்துவங்களை எடுத்துரைக்கின்றான்.

"பூமியில் பற்பலவிதப் பகுதிகள் காணப்படுகின்றன; ஆயினும் அவை ஒன்றோடொன்று இணைந்தே இருக்கின்றன. அவற்றில் திராக்ஷைத் தோட்டமும் உண்டு; தானியம் விளையும் பயிர்களும் உண்டு. பேரீத்த மரக் காடுகளும் உண்டு. அவற்றில் கிளைகளையுடையவையும் உண்டு; கிளைகள் இல்லாதவையும் உண்டு. ஆயினும் எல்லாவற்றிற்கும் ஒரே விதமான (மழை) ஜலமே புகட்டப்படுகின்றது. ஆனால் (கனிகள் தருவதாலும் புஷ்பம் தருவதாலும், மற்றும் பிரயோஜனங்களாலும்) அவை ஒன்றைவிட ஒன்று சிறப்புடையனவாகவே விளக்குகின்றன. இத்தகைய (இயற்கை வளப்) பொருட்களிலே பகுத்தறிவையுடைய சமூகத்தினர்க்கு (ஆண்டவனை அறிய) அநேக அத்தாக்ஷிகள் உண்டாயிருக்கின்றன." (அல் குர்ஆன்)

இது குர்ஆன் திருவாக்கியம். ஆண்டவனே நமக்கு உதாரணத்தின் மூலம் கற்பிக்கும் பாடம். என்ன எளிமையான உதாரணம்! என்ன அருமையான விஷயம்!

## தெய்வீகக் கற்பனை.

உதாரணத்துக்கு ஒரு பூமி அதாவது ஒரு தோட்டம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அங்கு ஒரு பக்கத்தில் திராக்ஷைத் தோட்டம் இருக்கின்றது. திராக்ஷைக் கொடி படர்ந்து பசுமையாய் காட்சியளிக்கிறது. திராக்ஷைக் கொடிகள் பந்தலில் ஏற்றப்பட்டு பரவி வியாபித்து கண்கொள்ளாக் காட்சியாய் அமைந்திருக்கிறது. அதில் திராக்ஷைப் பழக்குலைகள் சரிந்து தொங்கிக் கொண்டிருக்கின்றன. பழங்களின் இனிமை நாக்கில் ஜலம் ஊறும்படிச் செய்கிறது. திராக்ஷைப்பழம் உண்பதற்கு இனிமை தருவதோடு, வியாபாரத்துக்கும் ஏற்ற லாபம் தரும் பண்டம். அதைக் காய வைத்து, வெகுநாட்கள் கழித்து தூர நாடுகளுக்கும் அனுப்பிவைக்கிறார்கள். இதே விதமாய், பேரீச்சம் பழமும் மதுரமான பழங்களிலொன்றாகும். மற்ற பழங்களைப்போல் பேரீத்தம்பழம் சிக்கிரம் கெட்டுப்போகக் கூடியதல்ல. மாம்பழத்தைப் போல், ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் தின்று தீர்த்துவிடக் கூடியதல்ல. எல்லா நாட்டுக்கும் அதை அனுப்பலாம்; எல்லா காலத்திலும் உபயோகிக்கலாம். இந்த இரண்டு கனிவர்க்கம் அரபு நாட்டில் வியாபாரத்துக்கேற்ற சரக்குகளாகும்.

திருக் குர்ஆனில் ஆயிரக்கணக்கான, உதாரணங்களுடன் பல்லாயிரக்கணக்கான விஷயங்கள் எடுத்தோதப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று: ஒரேவித நிலத்தில் பற்பல விதமான மரஞ்செடிகள் உண்டாவதும், ஒரேவித ஜலத்தின் பயனாக பலவித ருசிகளுள்ள கனிவர்க்கங்கள் உண்டாவதுமாகும்.

மனிதன், இவ்வுலகில் தோன்றுவது எதற்கு? பிறந்து வளர்ந்து உண்டு உறங்கி, சுகமும் சஞ்சலமும் அனுபவித்து, வெறுமனே செத்தொழிவதற்காக அல்ல! மனிதன் பகுத்தறிவுடன் பிறப்பவன்; அவன் வளரவளர அவனது அறிவும் ஆராய்ச்சியும் வளர்ந்து கொண்டே போகும். அதற்கேற்ப அவன், தன் பொறுப்பு என்ன? கடமை யாது? என்பதை உணர்ந்து பார்க்கவேண்டும். உணர்ந்து பார்ப்பது மட்டுமல்ல, தன் உயிரும் உடலும் யாருக்கு உரியதோ அந்த ஏக தெய்வத்துக்கு சிரம்பணிந்து, துதித்துப் போற்றி வணங்கி நன்றியை தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

"உலகை படைத்திட்டான் மனுவுக்காக; மனுவைப் படைத்திட்டான் தன்னை வணங்க" என்றுள்ள வாக்கியத்தில் எத்துணை தத்துவமும் கருத்தும் அமைந்திருக்கிறது பாருங்கள்.

தனக்கு உணவும் பொருளும் சௌக்கியமும் தரும் எஜமான் சொன்னபடி எல்லாம் கேட்டு நடப்பதுதானே ஊழியனுடைய கடமை அதே மாதிரிதான், நமக்கு இவ்வுலகத்தின் சுகசாதனங்களை யெல்லாம் நமக்கு அருள்புரிந்த சர்வமும் வல்ல அல்லாஹ்வை, அனுதினமும் ஐங்காலமும் போற்றிப் புகழ்ந்து துதித்து வணங்க வேண்டியது நம் முஸ்லிம்களின் கடமையாகும்.

பொதுவாக, மனிதருக்கு இத்தகைய சத்குணமும் நல்லொழுக்கமும் அமைந்திருக்க வேண்டும். இத்தகைய நற்குண நல்லொழுக்கம், மனிதத்தன்மையில் உண்டாய் விட்டால், உலகமெல்லாம் சுபீக்ஷம் உண்டாகி, எங்கும் க்ஷேமம் நிலைத்திருக்கும். க்ஷேமமா யிருக்கும் போது மனிதன் கடவுளை தியானித்து வணங்க கடமைப்பட்டுள்ளான். அங்ஙனம் மனிதன் இறைவனுக்கு கடமையை செலுத்தாவிட்டால், அவனில் மனுஷ்யத்தன்மை இல்லையென்று தான் அர்த்தம். மனுஷ்யத்தன்மை இல்லாதவன் மிருகத்துக்கு சமம்.

இதுதான் மனித சமூகத்தின் மகாப்பெரும் பண்பாடாக இலங்க வேண்டிய குணப் பண்பாடு. இதுதான் இக்காலை எங்கும் நிலைத்திருக்க வேண்டிய பொதுவான நற்குணம். உலகில் சாந்தியும் சமாதானமும் நிலைத்திருப்பதற்கு இந்த நல்ல பண்பாடே வேண்டும். இதுவே சாந்தி மார்க்கப்போதனை; இதுவே இஸ்லாத்தின் கட்டளை. எல்லாம் வல்ல இறைவன் இந்த அரிய போதனையின்படி நடக்க, நமக்கு நல்லருள் பாலிப்பானாக. ஆமீன்.

வெளிவந்து விட்டது.

# ஜவாஹிருல் பவாயித்

புதிய ஆறும் பதிப்பு.

இப்புத்தகத்தில் 1-வது அல்லாஹுத் தஆலாவின் திரு நாமங்களாகிய 'அஸ்மாஉல் ஹுஸ்னு' என்னும் அழகிய 99-இஸ்முகளும், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே தர்ஜுமாக் களும் தக்ஸீறுகளும் காஸியத்துகளும், 2-வது 'அஸ்மாஉல் இலாம்' அதாவது நபிமார்கள் ஓதிவந்ததும் ஷர்ஐ விட்டும் தனித்ததுமான 40-அஸ்மாக்களும், அவைகளில் வெளியாகும் அநேக கைபியத்து, அஜாயிபு முஃஜிஸாத்து, அஸ்றாறு முத லான மட்டில்லாத பிரயோஜனங்களும், 3-வது 'ஹயாத்துல் ஹைறவான்' என்னும் உயிர் பிராணிகள் சகல ஜந்துகள் ஒவ் வொன்றின் குணாகுணங்களும், அவைகளின் அவயவ மென் னும் அங்கங்களால் மனிதர்களுக்கு உண்டாகும் பற்பல வியாதி களுக்கு அவிழ்தங்களும், இன்னுல் ஹதீதுகளும் ஹிக்காயத்து களும்; 4-வது மனமுடைய தஃபீர் என்னும் கனவு நூலும், அதில் எவ்வண்ணமாய் கனவு கண்ட காக்ஷிகளுக்கு விரிவாகிய தஃபீர்களும், அதற்கு அத்தாக்ஷியாகிய அநேக ஹிக்காயத்து களும்; 5-வது வைத்திய சுருக்க மென்னும் சகல வியாதிகளுக் கும் நுட்ப பரிகாரங்களும், இன்னும் அநேக பாயிதாக்களும் இருக்கின்றன. இவற்றின் அரபு இஸ்முகளை மாத்திரம் லெத்தோ கிறுப்பில் அரபியிலும் மற்றவை யெல்லாம் சுத்த தமிழாலும் அச்சிட்டு கலிகோ பைண்டு செய்யப் பட்டது.

விலை ரூ. 6

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# திருக் குர்ஆன் :: :: :: :: சாரசங்கிரஹம்.

## அல்லாஹ்வைப் பற்றிய ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

### அல்லாஹ்வின் பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

(ஜனங்களே, இந்த) உங்களுக்கு அருளப்பட்டுள்ளவையெல்லாம் இவ்வுலக வாழ்வுக்குரிய (அநித்திய) சாதானங்களேயாகும். ஆனால் (மறுலோகத்தில் உங்களுக்கு) ஆண்டவனிடம் இருக்கும் சாதனங்கள் இவைகளைக்காட்டினும் மகா சிரேஷ்டமானவையாகும். இவை எந்த மாந்தர்கட்கென்றால், அல்லாஹ்வின் மீது நல் விசுவாசங் கொண்டு, அவ்விரக்ஷகன்பால் பூரண நம்பிக்கை வைத்து (உயிர்) வாழ்வார்களே அவர்களுக்கேயாம். இன்னும் அவை யாருக்கெனில்: மகாபாபங்களை விட்டும், மானங்கெட்ட செயல்களை விட்டும் ஒதுங்கி (ஒழுக்கமாய்) இருக்கிறார்களே அவர்களுக்கேயாம். அன்னோர் (எப்படிப்பட்டவர்களென்றால்) அவர்கட்கு (யார் மீதாவது) கோபம் ஏற்படுங்கால், மன்னித்து விட்டுவிடுவார்கள். இன்னும் அவை யாருக்கெனில் அன்னோர் தங்கள் இரக்ஷகனின் கட்டளைப்படி நடந்துகொள்வார்கள்: தொழுகையை நிறைவேற்றுவார்கள். அன்னோர் தங்கள் காரியங்களில் (பரஸ்பரம்) ஆலோசனை செய்து கொள்வார்கள். நாம் அவர்கட்கு அருட் புரிந்துள்ள பாக்ய (செல்வ)ங்களிலிருந்து, ஆண்டவன் பாதையில் (எளியோர்களுக்கு அளித்து) செலவு செய்வார்கள். இன்னும் அன்னோர் மீது அளவுக்கதிகமான அதிக்ரமங்கள் இழைக்கப்பட்டிருந்தாலும் (மன்னித்து) அளவோடு பதில் நடவடிக்கை புரிவார்கள். (இன்னோர் எப்போதும் ஆண்டவனருளுக்கு உரித்தானவர்கள்.) (ஸூரா: ஷூரா; ருகூ: 4)

### அல்லாஹ்வின் வழி தவிர வேறு இல்லை.

யாரை அல்லாஹ் வழிகெட்டுப் போகும்படி விட்டு விட்டானோ, அன்னோர் விமோசனம் பெற (அல்லாஹ்வின் சன்மார்க்கம் தவிர) வேறு மார்க்கமில்லை. எந்த (கியாமத்து சோதனை) நாள் வந்தால் தடுத்துக் கொள்ளமுடியாதோ அந்த நாள் வருவதற்கு முன்னே, நீங்கள் உங்கள் இரக்ஷகனின் கட்டளைகளின்படி நடந்து கொள்ளுங்கள். அந்த நாளில் உங்களுக்கு வேறு பாதுகாப்பு இடம் கிடைக்காது. மேலும் நீங்கள் உங்கள் பாபங்களை மறுத்துக்கூறி (தப்பித்து) விடவும் முடியாது. (ஸூரா: ஷூரா; ருகூ: 5.)

## ஆண்டவனே, மக்களை ஈபவன்.

வானலோகத்துடையவும் பூலோகத்துடையவும் அரசாட்சியெல்லாம் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். அவன் தான் நாடியவண்ணமெல்லாம் செய்கின்றான். தான் நாடியவர்கட்குப் பெண்பிள்ளைகளை (அதிகம்) தருகிறான்; தான் நாடியவர்கட்கு ஆண்மக்களையும் அருள் புரிகின்றான். அல்லது ஆண்களும் பெண்களுமாய் இருவிதப் புத்திர பாக்யத்தை (திருப்திகரமாய்), அருள் புரிகின்றான். இன்னும் தான் நாடியவர்களை புத்திரபாக்கியமே இல்லாதவர்களாக்கி விடுகிறான். எனவே அவன் யாதோர் ஐயமின்றி, சர்வக்ஞனாகவும் சக்தியுடையவனாகவும் இருக்கின்றான். (ஸூரா: ஷூரா; ருகூ: 5.)

## அல்லாஹ் எவரிடமும் நேரில் பேசுவதில்லை.

அல்லாஹு (தஆலா)வுடன் நேருக்குநேர் சம்பாஷிக்க எந்த மானிடப் பிறவியாலும் (இயலவே) இயலாது. ஆனால், (ஞானோதய) வஹீயின் மூலமாகவோ, அல்லது (பரம ரகசிய) திரைக்குப் பின்னாலிருந்தோ பேசுவான். அல்லது யாரேனுமொரு தேவதூதரை (மலக்கை) அந்த மனிதரிடம் அனுப்பி (எதும்) அறிவிப்பான். அந்தத்தூதர், ஆண்டவன் கட்டளைப் பிரகாரம், ஆண்டவனுக்கு இஷ்டமுள்ளதை (தூது மொழியாய்) அவன் பால் ஒப்படைத்து விடுகிறார். யாதோர் ஐயமின்றி, இறைவன் மகா உன்னத பதவியுடையவனாகவும் மகா விவேகமுடையவனாகவு மிருக்கின்றான். (ஸூரா: ஷூரா; ருகூ: 5.)

## ஆண்டவன் பாதையில் மரிப்போர் உயர்ந்தோர்.

அல்லாஹுடைய பாதையில் (சத்தியத்துக்காக) மரித்துவிடுகிறார்களே அவர்களுடைய (தியாகச்)செயல்களுக்குரிய பலனை, ஆண்டவன் ஒருபோதும் வீணாக்கிவிட மாட்டான். (நிச்சயம்) அன்னோர் தங்களுக்குரிய(உன்னத)ஸ்தானத்தைப் பெறுவர். அன்னோரை (மறுலோக வாழ்வில்) மகா சந்தோஷத்துடன் வைப்பான். அன்னோரை அழைத்து சுவர்க்கலோகத்தில் இருக்கச் செய்வான். இந்த நந்நிலையை இறைவன் அவர்கட்காக ஆதியிலே ஏற்படுத்தி வைத்திருக்கிறான். (ஸூரா: முஹம்மத்; ருகூ: 1.)

## அல்லாஹ்வுக்கு உதவுவது தனக்கே உதவி.

விசுவாசங் கொண்டவர்களே (முஸ்லிம்களே!) நீங்கள் (சன்மார்க்க விஷயங்களில்) அல்லாஹ்வுக்கு உதவி செய்வீர்களாயின் அவன் உங்களுக்கு உதவிகள் புரிவான். மேலும் உங்களுடைய பாதங்களை (எதிரிகளுடைய தாக்குதலின்போது நழுவி விடாமல்) ஸ்திரமாக்கி நிலைக்கச் செய்வான். எவர் (நம்பிக்கை)கெட்டு (வஞ்சகர்ளாய்) போய்

விடுவரோ, அவர்களின் பாதங்கள் நிலைகுலைந்து போகச்செய்வான். இன்னும் அவர்களின் முயற்சியெல்லாம் நாசமாய்ப் போய்விடச் செய்வான். இஃதெல்லாம் ஆண்டவன் அவர்களுக்கு இறக்கித் தந்த (சன் மார்க்கத்)தை அன்னோர் வெறுத்தார்களே அதற்காகவே யாகும். எனவே அவர்களுடைய (தீய) செயல்களுக் குரிய பரிகாரத்தையே ஆண்டவன் அப்படி (தண்டனையாக அளிக்க)ச் செய்கிறான். (ஸூரா: முஹம்மத்; ருகூ: 1.)

## இறைவன் நம் பிடரி நரம்பினும் அருகில் உள்ளான்.

(அல்லாஹ்வாகிய) நாமேதான் மனிதர்களை (ஆதியில்) சிருஷ்டித்தோம். எனவே யாம் அம்மாந்தரின் (இயற்கை) சந்தேகாஸ்பதங்களை யெல்லாம், மனதில் உதயமாகும் எண்ணங்களை யெல்லாம் நன்கறிவோம். மேலும் (அல்லாஹ்வாகிய யாம்) அம்மனிதனுடைய பிடரி நரம்பைவிட மிக அருகில் இருக்கின்றோம். (ஆயினும் மனிதன் ஆண்டவனை மறந்துவிடுகிறான்.) (ஸூரா: காப்; ருகூ: 2.)

## ஆண்டவன் எந்தெந்த பாக்கியத்தை மறுக்க முடியும்?

(மனித வர்க்கத்துக்கும் ஜின் வர்க்கத்துக்கும், எல்லாம் வல்ல இறைவன், அருள் பாலித்த பாக்கியங்கள் எண்ணற்றதாகும். அவற்றில் குறிப்பிடத் தக்கவை:—) அந்த ரஹ்மான் (ஆகிய இறைவன்) திருக்குர்ஆனை போதித்துத் தந்தான்; மனுஷனை (சுயமாக) சிருஷ்டித்தான்; அவனுக்குப் பேசுவதற்கும் கற்றுக்கொடுத்தான். (அவ்வாண்டவன் சிருஷ்டித்த) சூரியனும் சந்திரனும், அவற்றிற்குரிய கணிதப் பிரகாரமே இயங்கிக் கொண்டிருக்கின்றன. தாவரங் (களாகிய சிறு செடி)களும், (பெரிய) விருக்ஷங்களுங்கூட, அவனை (சிரம்பணிந்து) வணங்குகின்றன. அவ்விறைவனே, வானத்தை (தளமாக) உயர்த்தி வைத்தான். மேலும் (நியாயமாய் நடக்க) தராசையும் (மாந்தர்க்கு) உண்டாக்கித் தந்தான். நிறுத்துக் கொடுப்பதில் நீங்கள் மோசம் செய்யாதிருங்கள். நியாயமான முறையில் சரியானபடி நிறுத்துக் கொடுங்கள், குறைத்து விடாதீர்கள் என்று கட்டளையும் இட்டான். மேலும் சிருஷ்டி இனங்களுக்காக அவ்விறைவன் பூலோகப் பரப்பை உண்டாக்கினான். அதில் விதவிதமான கனி, தானிய வகைகளை உற்பத்தி செய்தான். அவற்றில் தொலி போர்த்தப்பட்ட பேரீத்த மரங்களும் உண்டு. உமிக்குள் பொதிந்துள்ள (நெல், கோதுமை) தானியங்களும் உண்டு. நறுமணங் கமழும் அழகிய புஷ்பங்களும் உண்டு. (உங்களுக்கு இத்தனை பாக்கியங்கள் அருளப்பட்டிருந்தும் ஏ மாந்தரே, ஜின்களே) நீங்கள் இருசாராரும், உங்கள் இரக்ஷகனின் எந்த எந்த பாக்கியங்களைத்தான் (பொய்யென) மறுத்துவிட முடியும்? (இறைவன்) மனுஷ்யரை ஆதியில் சுட்ட ஓடு போன்ற மண்ணிலிருந்தே உற்பத்திச்

செய்தான். ஜின்களை மட்டும் அக்கினி ஜுவாலையிலிருந்து உயிர்ப்பிக்கச் செய்தான். (இங்ஙனமெல்லாமிருக்க) இன்னும் நீங்கள் இருசாராரும் உங்கள் இறைவனின் எந்தெந்த பாக்கியங்களைத்தான் (பொய்யென) மறுக்கப் போகிறீர்கள்? மேலும் அவ்வாண்டவன் (சூரியன் உதயமாகின்ற) இரண்டு கீழ்த்திசை (நாடு)களுக்கும் இரக்ஷகனாக இருக்கிறான். மேலும் அவன் (சூரியன் அஸ்தமிக்கின்ற) இரண்டு மேற்றிசை நாடுகளுக்கும் இரக்ஷகனாக இருக்கின்றான். எனவே, நீங்கள் இருசாராரும் உங்கள் இரக்ஷகனின் எந்தெந்த பாக்கியங்களைத்தான் (பொய்யென) மறுக்கப்போகிறீர்கள்? அவ்விறைவனே, (லோகோபகார்த்தமாய்) சமுத்திரங்களைப் படைத்தான். அந்த (நன்னீர், உப்புநீர்) சமுத்திரங்கள் ஒன்றோடொன்று இணைந்திருந்தபோதிலும் இரண்டுக்குமிடையில் (பரம ரகசியமான) திரையும் குறுக்கிட்டுக் கொண்டிருக்கிறது. ஆதலில் அவை பரஸ்பரம் (கலந்துப்போக) முற்படுவதில்லை. (இங்ஙனமெல்லாம் மிருந்தும்), நீங்கள் இருசாராரும் உங்கள் இரக்ஷகனின் எந்தெந்த பாக்கியங்களைத்தான் மறுத்துக் கொண்டிருக்கப்போகிறீர்கள்? அவ்விரண்டு (சமுத்திர) தீரத்திலிருந்து முத்துக்கள் குளிக்கப்படுகின்றன. பவழங்களும் எடுக்கப்படுகின்றன. அங்ஙனமிருக்க, நீங்கள் இருசாராரும் உங்கள் இரக்ஷகனின் எந்தெந்த பாக்கியங்களைத்தான் (பொய்யென) மறுக்கப்போகிறீர்கள்? மேலும் (கடல் கடக்கும் தன்மைபெற்ற) கப்பல்களெல்லாம், அவ்விறைவனுக்குரியன வேயாகும். (அவன் கற்பனைப்படியே) அவை சமுத்திரத்திலே (மூழ்கிப் போகாமல்) மலைகளைப்போல் நிற்கின்றன. (இவ்வாறெல்லா மிருந்தும்) நீங்கள் இருசாராரும் உங்கள் இறைவனின் எந்தெந்த பாக்கியங்களைத்தான் (பொய்யென) மறுக்கப் போகிறீர்கள்? (ஸூரா: அர்ரஹ்மான்; ருகூ: 1.)

(தொடரும்.)


## பலேலாவின் மர்மம்.

இது ஒரு அருமையான துப்பறியும் கதை. இதில் ஒரு பாங்கை மோசம் செய்ய சிலர் எத்தனித்ததையும் அது கை கூடாவண்ணம் செய்து அவர்களின் திருட்டு யோசனைகளை வெளியாக்கிய துப்பறியும் ஷம்ஸின் செயல்களும் விளக்கப்பட்டுள்ளது.

தேவையுள்ளோர் 9 அணு ஸ்டாம்பு அனுப்பி வைத்தால் புக்போஸ்ட் மூலம் அனுப்பப்படும்.

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# ஹாத்திம் மகள்

(உண்மைக் கதை)

(டி. எப். ஆர். மஆலி சாஹிப்—பாகவி)

சோதரீர் !

ஹாத்திம் என்ற பெயரை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஹாத்தீம் என்பவர், முற்காலத்தில் மகாப் பெரும் கொடைவள்ளலாக இருந்து வந்தார். தானதர்மம் செய்வதில் உலகில் இணையில்லாதவர் என்று பெயரும் பிரபல்யமும் உடையவராய் விளங்கினர்.

ஹாத்திம் அரபு தேசத்தில் இருந்து வந்தார். அவரது குடும்பத்தின் பெயர் "தையி" என்பதாகும். எனவே, அவரது முழுப் பெயரை 'ஹாத்திம் தையி' என்று சொல்லுவார்கள். ஹாத்திம் தாயீ என்பதும் பொருந்தும். தையி வம்சத்தைச் சேர்ந்த ஹாத்திம் என்று இதற்குப் பொருள். ஹாத்திம் அவரது வம்சத்துக்கே தலைவராகவும் ஸர்தாராகவும் இருந்து வந்தார்.

## ஹாத்திம் முஸ்லி மல்ல.

'ஹாத்திம் தையி' ஒரு முஸ்லிம் என்று நம்மில் அநேகர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனல் அது உண்மையல்ல. ஆண்டவனின் தூதர் நமது நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் காலத்திற்கு சற்று முன்னரே, ஹாத்திம் என்பவர் இறந்து போய் விட்டார். எனவே அவர், நபிகள் பெருமானர் (ஸல்) திருச் சமுகத்தில் முஸ்லிமாகி அமர்ந்திருக்கும் பாக்யத்தை பெறவில்லை. ஆனல் ஓர் உண்மை முஸ்லிமுக்கு இருக்க வேண்டிய குணமெல்லாம் அவரிடம் பொருந்தியிருந்தன.

ஹாத்திமுக்கு ஒரு பிள்ளை இருந்தார். இவரது பெயர் அதீ என்பதாகும். ஹாத்திமைப் போலவே அதீயும் தையி வம்சத்துக்கு ஸர்தாராகவே விளங்கி வந்தார்.

## அதீ ஒரு கிறிஸ்துவர்.

நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முன் அரபு தேசத்தில் கிறிஸ்துவர்களும், யூதர்களுமே மல்கி யிருந்து வந்தனர். நாயகம் (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத்து கிடைத்து, இஸ்லாம் மதப் போதனைகளை அரபு ஜனங்களுக்குப் போதித்து வந்த போது, இஸ்லாத்துக்கு எதிரியாக இருந்து வந்த அரபு நாட்டுத் தலைவர்களில்

அதீ பின் ஹாத்திமும் ஒருவர். இந்த அதீயின் ஜனங்களாகிய கிறிஸ்து வர்கள் இஸ்லாத்துக்கு எதிரிடையாய் போராட்டங்கள் புரிந்தன ராயினும், வீரதீர சத்திய முஸ்லிம்களை இறுதி வரை எதிர்த்து நிற்க இவர்களால் முடியவில்லை.

இஸ்லாத்துக்கு அரபு நாட்டில் ஆங்காங்கு வெற்றி ஏற்பட்டு, இஸ்லாமியப் படை நாலாத் திசையிலும் முன்னேறிக் கொண்டிருந்த காலத்தில், தையி வம்சத்துத் தலைவராகிய அதீ, தன்னுடைய மனைவி மக்களை அழைத்துக் கொண்டு, அரபு நாட்டை விட்டு ஸிரியா எனப் படும் ஷாம் தேசத்துக்கு ஓடிப் போய் விட்டார்.

## ஹாத்திம் மகள்.

ஹாத்திமின் குமாரர் அதீ, அரபு நாட்டை விட்டு மனைவி மக்க ளுடன் ஓடிப்போன போது, அதீ தனது தங்கையை கூட அழைத்துப் போக மறந்து விட்டாரோ, அல்லது தவறி விட்டுச் சென்றாரோ தெரிய வில்லை. அதீயின் தங்கை, வெற்றி பெற்று முன்னேறிச் சென்ற முஸ் லிம்களிடம் கைதியாகப் பிடிப்பட்டாள். சிறை பிடிக்கப்பட்ட இப் பெண்ணை, முஸ்லிம்கள் பத்திரமாக மதீனா நகருக்கு அழைத்து வந்து கைதிகளை வைக்க வேண்டிய இடத்தில் வைத்தனர்.

இந்த சமாச்சாரம், நமது நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குத் தெரிந்தது.

“அரபு நாட்டில் பண்டை போது மகாப்பெரும் கொடைவள்ளலாக விளங்கி வந்த ஹாத்திமுடைய மகள், முஸ்லிம்களால் சிறை பிடிக்கப் பட்டு வந்திருக்கிறாள்” என்ற தகவல், நபிகள் பெருமானாருக்குத் தெரிந்ததும், அப்பெண்மணியை மிகவும் மரியாதையுடன், தம் சமு கத்துக்கு அழைக்கச் செய்தார்கள். உடனே, அம்மாதின் அடிமைத் தளையை முறித்து, சுயேச்சையாய் விடுதலை செய்து விட்டதோடு, ஏராள மான இனாம் சன்மானங்களும் கொடுத்து, வழிப் பிரயாணத்துக்கு வேண்டிய உதவியும் புரிந்து, கௌரவத்தோடு விடை கொடுத்து, அவ ளுடைய ஊருக்கே திரும்பிப் போய் விடுமாறு உத்தரவு கொடுத்து அனுப்பி விட்டார்கள். அப்படியே அப்பெண்மணி போய் விட்டாள்.

## முஸ்லிம்களின் நல்லுறவு.

ஹாத்திமின் மகள், மதீனாவில் சிறைப்பட்டிருந்த போது, முஸ் லிம்களுடைய பாதுகாப்பில் கொஞ்ச நாள் இருந்தனள். அப்போது அவள் முஸ்லிம்கள் இஸ்லாத்தைப் பற்றிப் பேசிக் கொள்வதையும், மகான் முஹம்மத் நபீ (ஸல்) அவர்களின் குணநலன் பற்றிப் புகழ் வதையும் கேட்டிருந்தாள். அத்துடன் முஸ்லிம்கள் தொழுதுக் கொள்வது, நற்குண நல்லொழுக்கஸ்தராய் விளங்குவது, வீரதீரப்

பாராக்கிரமத்துடன் சன்மார்க்கத்துக்காக உழைப்பது முதலிய நடத்தைகளையும் பார்வை யிட்டிருந்தாள்.

இந்த சத்திய விஷயங்க ளெல்லாம், அந்த உத்தமியின் தூய உள்ளத்தில் இடம் பெற்றுக் கொண்டன. எனவே, அதைப் பற்றி சிந்திக்கலானுள் :—"ஹஜ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்திருக்கும் இஸ்லாம் மார்க்கம் சத்தியமான தாகவே இருக்க வேண்டும். ஆகையால் தான் முஸ்லிம்கள் நல்லவர்களாக விளங்குகிறுர்கள். ஆஹா, முஹம்மத் நபியின் வாழ்க்கை எத்துணை தூய்மையாக இருக்கிறது! முஹம்மத் நபியை பின்பற்றும் முஸ்லிம்களும் எத்துணை நல்லவர்களாக திகழ்கின்றனர்! இன்னோர் பொய் சொல்வதில்லை. கொடுமை புரிவதில்லை. எனவே இவர்களின் மார்க்கம் சத்தியமானது. இவர்கள் ஒரே தெய்வத்தை ஏக நாயகனைத் தொழுதுக் கொள்வது எவ்வளவு சிரேஷ்டம்" என்று அந்த ஹாத்திமின் மகள் யோசித்துக் கொண்டிருந்தாள்.

ஆம். யாருடைய உள்ளத்தில் களங்கமும் துவேஷமும் இருக்க மாட்டாதோ அவர்கள், சத்திய சன்மார்க்கம் யாதென்பதை ஒரு முறை கண்டதும் பழகியதும் தெரிந்துக் கொள்வார்கள். பிடிவாதமும் துவேஷமும் தான் மனிதர்களின் கண்களை மறைத்து விடுவது வழக்கம். எனவே ஒருவன் களங்கமில்லா மனத்துடனும் தூய சிந்தையுடனும், எந்த ஒரு விஷயத்தையும் சிரத்தையுடன் நோக்குவானுனல் அதில் உண்மையும் சத்தியமும் புலனுகாமல் போகாது.

ஆணுயினும், பெண்ணுயினும் இத்தகைய தூய மனமும், துவேஷமின்மையும் இருக்குமானுல், அவர்களுடைய நடத்தையும் ஒழுக்கமும் சுத்தமாகவே யிருக்கும். அன்னோர் எதிலும் பிடிவாதம் செய்ய மாட்டார்கள். உண்மையை உண்மை யென்றும், பொய்யை பொய் யென்றும் பாகுபடுத்தி உணர்வார்கள். இன்னோரே உலகில் சத்திய பக்தர்களாகவும், உத்தம சீலர்களாகவும் விளங்குவார்கள்.

## ஹாத்திம் மகள் முஸ்லிமானுள்.

"முஹம்மத் நபி பொய் சொல்வதில்லை, யாருடைய விருப்புக்கும் வெறுப்புக்கும் இலக்காவதில்லை, இறைவனைத் தவிர வேறு யாருக்கும் அவர் பயப்படுவதில்லை. அவர் நபியானது, யாரிடத்திலும் பணமோ, காசோ பறிப்பதற்கில்லை, சுகபோகம் அனுபவிப்பதற்கல்ல, அவர் வாய் மொழியாய் கூறுவதெல்லாம் சத்தியமான விஷயங்கள்; நேர்மையான உபதேசங்கள்" இதை யெல்லாம் ஹாத்திமின் புதல்வி மனதில் இறுத்திக் கொண்டவுடன், அவள் அந்தராத்மா முஸ்லிமாய் விடும்படி அவளைத் தூண்டியது. எனவே, அவள் யாருடைய வற்புறுத்தலு மில்லாமல் ஈமான் கொண்டு முஸ்லிமாகி விட்டாள்.

'ஓரே இறைவனாகிய அல்லாஹ்வே வணக்கத்துக்குரிய ஏக தெய்வம். அவனைத் தவிர்த்து வேறு யாரும், வேறு எந்த தெய்வமும் வணக்கத்துக் குரியதல்ல. மனிதராகப் பிறந்தோ ரெல்லாரும் ஒற்றுமையா யிருந்து, அந்த ஒரே தெய்வத்தை தான் வணங்க வேண்டும், அவன் கட்டளைப்படி நடக்க வேண்டும், அவனிடமே எந்த உதவியையும் கோர வேண்டும். ஹஜ்ரத் முஹம்மத் (ஸல்) அந்த அல்லாஹுடைய திருத்தூதர் என்பதில் சந்தேகமில்லை. அவர் சொல்வது ஆண்டவனுடைய திருத்தூது மொழிகளே யாகும். அவருக்கு வழிப்பட்டோரே விமோசனமும், மோக்ஷமும் பெற முடியும்.' இவ்வாறாக அறுதியிட்டு உறுதி கூறி ஈமான் கொண்டு முஸ்லிமாகி விட்டாள் ஹாத்திமின் புத்திரி.

## தமயனுக்கு தங்கையின் போதனை.

ஹாத்திமின் மகள் முஸ்லிமாகி வீட்டுக்கு வந்து சேர்ந்ததும், தான் மதீனாவில் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் திருச்சமுகத்தில் நிகழ்ந்த உண்மைகளை ஜனங்களுக்கு எடுத்தோதலானாள். தான் பெற்ற இன்பம் இவ்வையக மெல்லாம் பெற வேண்டும் என்பது அவளுடைய ஆசை.

முஸ்லிம் படைகளுக்கு பயந்துக்கொண்டு ஷாம்தேசத்துக்கு குடும்பத்துடன் ஓடிப்போயிருந்த தன்னுடைய தமயனாருக்கு, அந்தப் பெண் செய்தி யனுப்பினாள்:— "என் அருமைத் தமயனாரே, முஹம்மத் நபியின் ஆட்களுக்கு நீர் பயந்து ஓடிப்போய் விட்டீரே, அப்படிச் செய்திருக்க வேண்டிய அவசியமில்லை. முஹம்மத் என்பவர் மகா நல்லவர். அவர் சதா நல்ல விஷயங்களையே போதிக்கிறார். அவருடைய சிஷ்யர்களுடன் நான் பழகியதில், அவர்களும் நல்லவர்கள் என்பதை கண்டறிந்தேன். இனிமேல் நீர் முஹம்மதுடைய ஆட்களாகிய முஸ்லிம்களை வெறுக்க வேண்டாம். அவர்களுக்குப் பயப்பட வேண்டாம். இன்றே மதீனாவுக்குப் புறப்பட்டுப் போய், முஹம்மத் நபியை தரிசிப்பீராக. முஸ்லிம்களுடன் பழகுவீராக. அவர்களுடன் ஒரு நாள் நீர் பழகுவீரானால் என்றென்றும் அவர்களுடனேயே சேர்ந்து விடுவீர். அங்ஙனம் முஸ்லிம்களுடன் பழகி, முஹம்மத் நபியிடம் உமக்கு விசுவாசம் ஏற்பட்டதும், நீர் தாமதம் செய்யாமல் ஈமான் கொண்டு முஸ்லிமாகி விடுவீராக. தங்கை யென்ற உறவில் இந்தச் செய்தியை நான் உமக்குத் தெரிவிக்கிறேன்" என்பதே தங்கை தமயனுக்கு எழுதிய (அனுப்பிய) கடிதத்தின் (தூதின்) சமாசாரம்.

## அதீயின் மதீனா அனுபவம்.

தங்கையின் நல்லுபதேசங்களை ஏற்றுக்கொண்ட தமயன் அதீ, உடனே மதீனாவுக்குப் புறப்பட்டார். மதீனாவுக்குப் போய்ச் சேர்ந்

ததும் நேராக நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களின் திருச் சமுகத்துக்குப் போனார். நாயகம (ஸல்) அவர்கள், வள்ளல் ஹாத்தி மின் புத்திரர் தம்மிடம் வருகிறார் என்பதைக் கேட்டு மிகமிக சந்தோஷப் பட்டார்கள். அதுமட்டுமல்ல, அதீ வந்ததும் அவருக்கு நல் வரவேற்பு அளித்து, தக்கபடி உபசாரம் புரிந்து தமது இல்லத்துக்கு அழைத்துக் கொண்டு போனார்கள் லோக தயாளர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

அதீபின் ஹாத்திம் மனதில் ஒரு சந்தேகம் இருந்தது: "முஹம்மத் என்பவர் நபி என்கிறார்களே அவர் உண்மையான நபிதானா? உண்மையான நபி என்பதற்குரிய லக்ஷணங்கள் அவரிடம் இருக்கின்றனவா? இதை யெல்லாம் பிரத்தியக்ஷமாய் கண்டறிந்த பின்பே இஸ்லாத்தை ஏற்க வேண்டும்'' என்று அதீ முடிவு செய்திருந்தார்.

அதன்படியே நபிகள் பெருமானாரின் ஒவ்வொரு பேச்சையும் செவி கொடுத்து கேட்டார். ஒவ்வொரு செயலையும் கண் திறந்து பார்த்தார். ஒவ்வொரு குணத்தையும் மனம் கொண்டு ஆராய்ந்தார். முஹம்மத் நபிக்கு இவ்வளவு செல்வாக்கும் அதிகாரமும் இருக்கின்றனவே, இவர் அறபு நாட்டுக்கு சக்ரவர்த்தியாய் விடுவதற்காக இவ்விதம் நடிக்கிறாரா? இதைக் கண்டறிய வேண்டும் என்ற எண்ணம் உடையவராய் இருந்தார் அதீ.

## திரு நபியின் தூய சேவை

லோக நாதர் ஆன்ம சீலர் நபிகளுதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஹாத்திமுடைய புத்திரன் அதீயை தம் இல்லத்துக்கு அழைத்துக் கொண்டு போகும் போது வழியில் ஓர் அபூர்வ சம்பவம் நிகழ்ந்தது. அதாவது :—

நபிகள் பிரான் முஹம்மத் (ஸல்) அதீ என்பவரை உபசரித்து அழைத்துக்கொண்டு, தம் இல்லம் நோக்கி போய்க் கொண்டிருந்தார்கள். போகும் பாதையில் ஒரு கிழவி பின்னு லிருந்து சப்தமிட்டு நபிகள் நாதரை கூவி அழைத்தாள், "ஓ முஹம்மதே, கொஞ்சம் இப்படி வந்து என் பேச்சை கேட்டுக் கொண்டு போ'' என்று கோரினாள்.

அரபு நாட்டு மாபெரும் தலைவரும் லோகத்துக்கே ஆத்ம அதிபருமான ஒரு பெரியவரை இப்படி ஒரு ஏழைக்கிழவி கூவி அழைக்கலாமா? சாதாரணமாய், தெருவில் போவோரை கைதட்டி அழைத்தால், கோபித்துக் கொள்கிறார்கள். ஆம், நாம் அவசர காரியமாய் போய்க்கொண்டிருக்கும் வழியில், யாராவது கூப்பிட்டால் அதை காதில்போட்டுக்கொள்ளாமலே போய் விடுகிறோமல்லவா ? இன்னும் சிலர் சண்டை போடவும், அடிக்க ஆரம்பித்து விடுவார்கள். அப்படி அழைக்கப்பட்டவர்

கொஞ்சம் பெருந்தன்மை யுடையவராய் இருந்தால் "ஏ பெரியம்மா! நான் அவசர காரியமாய் போகிறேன். உனக்கு என்னிடம் ஏதேனும் சொல்லிக்கொள்ள வேண்டியிருந்தால், அதை என் வீட்டில் வந்து சொல்லிக்கொள்" என்று கூறிவிட்டுப் போய்விடுவார்.

நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் சாதாரண மனிதரா? வேலையில்லாமல் கூப்பிட்டவர்களுடைய வீட்டுக்கெல்லாம் போய் கதை கேட்டு காலம்போக்குபவரா? ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் அவர்களது ஆக்ஞைக்கு காத்துக் கிடப்பவராயிற்றே! அரபு நாட்டு பணக்காரர்களும், அதிபர்களும், அதிகாரிகளும் அவர்கள் கட்டளை யேற்க காத்துக் கிடப்பவர்க ளாயிற்றே. அவர்கள் சமிக்ஞை செய்தால் நூற்றுக்கணக்கான வீரர், தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்து விடுவார்களே! மதீனாவில் நடைபெறும் இஸ்லாமிய ஜனநாயக அரசாங்கத்துக்கு அக்காலை திரு நபியன்றோ ஜனாதிபதியாக இருந்தார்கள்.

அப்படிப்பட்ட பேரதிகாரியும் மகாப்புருஷருமான நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள், சாதாரணக் கிழவி யொருத்தி தெருவில் கூவி அழைத்ததும் அலக்ஷியம் செய்து விட்டுப்போய் விடவில்லை. உடனே நின்று, திரும்பி கிழவியின் குடிசை வாசலுக்குப்போய், கிழவியிடம் மிக மரியாதையாக "பெரியம்மா, என்ன சமாச்சாரம்?" என்று அன்புடன் வினவினார்கள்.

அதீயை வெளியில் நிற்கவைத்து விட்டு கிழவி, தனிமையில் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வெகுநேரம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். இதையெல்லாம், நபி பெருமானார் (ஸல்) அவர்கள் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்து, சுமுகமாக இனிய மொழிகளில் அக்கிழவிக்கு சமாதானமும் பதிலும் சொல்லித் திருப்திப் படுத்திவிட்டு திரும்பி வந்தார்கள்.

இதையெல்லாம் அதீ என்பவர் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் உள்ளத்தில் நபிகள் நாதரின் உதாரண குணத்தினால் அன்பும் விசுவாசமும் சுரக்க ஆரம்பித்து விட்டன.

## அதீ கண்ட அற்புதம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பிறகு அதீயை தமது வீட்டுக்கு அழைத்துப்போனார்கள். நபி பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டின் எளிமையையும் எழ்மையையுமே முதலில் கண்டார் அதீ. அங்கு உட்காருவதற்கு, உயர்தர நாற்காலி, சோபா, பர்னீச்சர்கள் போடப்பட்டிருக்கவில்லை. பேரீச்ச மரத்துக் காய்ந்த சருகுகள் அடைத்த தோல் மெத்தை யொன்று போடப்பட்டிருந்தது. அதில் ஒரு ஆள் தான் உட்கார முடியும். அதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,

விருந்தினராகிய அதீயுக்கு எதிரில் போட்டு "நண்பரே, இதில் அமருங்கள்" என்று உபசரித்தார்கள். அதில் முஹம்மத் நபியை அமரச்செய்து விட்டு தாம் தரையில் உட்காரலாமென்று அதீ எவ்வளவோ முயன்றூர். முடியவில்லை. இறுதியில் வந்த விருந்தினரே அதில் உட்காரும் பாக்யம் பெற்றூர். நபிகள் நாயகம் (ஸல்) தரையில் உட்கார்ந்து உபசரித்தார்கள். என்னே பெருந்தன்மை!

இதுபோன்ற அநேக அற்புத குணதியங்களைக் கண்டார் அதீ. அப்போதுதத்தான் அதீக்கு, முஹம்மத் நபியிடம் கொண்டிருந்த சந்தேகம் நீங்கியது: "ஆம்! இந்த மனிதர் சாதரணமானவரல்ல. உலகத்தின் இன்பங்கட்கும் சுகபோகங்கட்கும் இவர் ஆசைப்பட்டவரல்ல; அரசப் பதவிக்கோ அதிகாரத்துக்கோ இவர் அபிலாஷை கொண்டவரல்ல. யாரிடமும் எதையும் பெறவேண்டுமென்ற சுயநல நோக்கமும் உடையவரல்ல. இவரே உண்மையான நபி, உத்தமப்புருஷர். இவரே, சத்திய சீலர். இவரே, அல்லாஹ்வுடைய உண்மையான ரஸூல் என்ற முடிவுக்கு வந்தார் அதீ.

## கிறிஸ்துவருடன் சம்பாஷணை.

ஆண்டவனின் திருத்தூதர் நபி (ஸல்) அவர்கள், கிறிஸ்துவ விருந்தினராகிய அதீயை நல்லமுறையில் உபசரித்து விட்டு, அவருடன் இதமான முறையில் சம்பாஷிக்கலானூர். அவரை நோக்கி எம் பெருமானூர் (ஸல்) கூறியதாவது:—

"அன்பர் அதீயே! நீர் கிறிஸ்துவ மார்க்கத்தை சேர்ந்தவரல்லவா? கிறிஸ்து மதமான பைபிளில், 'திருடக்கூடாது; கொள்ளையடிக்கக் கூடாது; பிறருக்கு துன்பம் இழைக்கக் கூடாது; பிறர் பொருளை கவர்ந்து செல்லக்கூடாது; வழிப்பிரயாணிகளுக்கு தொந்தரவு செய்யக் கூடாது" என்றெல்லாம் சொல்லப் பட்டிருக்கிற தல்லவா? அப்படியிருக்க, நீவிர் கொள்ளையடிக்கும் கிறிஸ்துவக் கூட்டத்தாருடன் சேர்ந்து கொள்ளை யடிக்கிறீர்! எளியோர் பொருளைக் கவர்ந்து செல்கிறீர்! கொள்ளையில் கிடைக்கும் பொருளைக் கொண்டு இன்பமாய் வாழுகிறீர்! இப்படியெல்லாம் செய்யலாமா? பாபமல்லவா?"

இதைக்கேட்டதும் அதீக்கு பெரும் ஆச்சரியமாய் போய் விட்டது. ஏனெனின் அவர் கொள்ளைக் கூட்டத்துடன் சேர்ந்திருப்பதும், மறைமுகமாய் களவுகொள்ளை புரிவதும் பிறர் யாருக்குமே தெரியாது. அவ்வளவு இரகசியமாய் கள்ளத்தனம் புரிந்து காலங் கழித்து வந்தார்.

"யாருக்கும் தெரியாத இரகசியம் முஹம்மதுக்கு மட்டும் எப்படி தெரிந்துவிட்டது; மனிதர் யாரும் இவருக்குச் சொல்லியிருக்க முடியாது. இவர் நபியாதலால், இவருக்கு திரிகால ஞானமும் இருக்

கும். தமது தெய்வீக தன்மையாலேயே அறிந்திருப்பார்'' என்று மனதில் எண்ணிக்கொண்டார்.

## திரு நபியின் இதோபதேசம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதீயை நோக்கி இனிய முறையில் மேலும் கூறியதாவது:—

"அன்பர் அதீயே! இதுகாறும் கிறிஸ்வரா யிருக்கும் நீர், திடீரென்று எம்மிடம் ஈமான்கொண்டு முஸ்லிமாய்விட வெட்கப்படுகிறீர் என்பதை நான் நன்குணர்வேன். ஆம், முஸ்லிம்கள் மிக ஏழைகள்; எளியவர்கள். கிறிஸ்துவர்களைப்போல் பணச் செல்வம் இல்லாதவர்கள். பட்டினியும் பசியுமாய் இருப்பவர்கள்; கட்டத் துணியில்லாமல், கந்தை உடுப்பவர்கள். இப்படிப்பட்ட பரம ஏழைகளுடன் பழகுவதற்கு, செல்வ அந்தஸ்தினரான நீர் வெட்கப்படுவது நியாயமே. ஆனால் இஸ்லாம் மதத்தில் இந்த வித்தியாச மெல்லாம் பாராட்டப்படுவதில்லை. சத்தியம் எது, அசத்தியம் எது என்பதை அறிவால் உணர்ந்து, நற்குண நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வது தான் முஸ்லிம்களின் கொள்கை. ஏழையா யிருப்பதனால் ஒருவரை பொய்ய னென்றும் கேவலமானவ னென்றும் கருதிவிடக் கூடாது. பணக்காரனாக இருப்பதனால் ஒரு அயோக்கியனை உத்தமன் என்று கருதிவிடக் கூடாது. முஸ்லிம்கள் பொருளால் ஏழை எளியவர்களாயின், சத்திய மனத்தால் பணக்காரரை விட சிறந்தவர்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் நாடினால், ஒரு நொடிப் பொழுதில் ஏழையை பணக்காரனாக்குவான்; பணக்காரனை ஏழை யாக்குவான்.

"அன்பர் அதீயே, முஸ்லிம்களிடம் அரசாங்க மில்லையே, அதிகார மில்லையே; கிறிஸ்துவர்கள் உலகில் பல திசையில் பெரும் ராஜ்யாதிகாரம் உடையவர்களாய் இருக்கிறார்களே என்று நீர் எண்ணிப் பின்னடையலாம். இதெல்லாம் அநித்தியமான வாழ்வு. இன்று தேசமில்லாமல், ராஜ்யமில்லாம லிருக்கும் முஸ்லிம்கள், இன்னும் கொஞ்ச காலத்தில் உலகத்தின் பெரும் பகுதியை வெற்றிக் கொண்டு ஆளத் தான் போகிறார்கள். இன்னும் சொற்ப காலத்தில், இஸ்லாத்தின் பசுங் கொடி, உலகத்தின் பல பகுதிகளுக்கும் பரவிச் சென்று பறக்கத்தான் போகிறது. சொற்ப நாளில், வடகோடி முதல் தென் கோடிவரை, இஸ்லாமிய தர்ம ராஜ்யம் நடைபெறப் போகிறது. அப்போது ஷாம் தேசத்து நகரான காதிஸியாவி லிருந்து இந்த மதீனா வரை, ஒரு வயோதிகக் கிழவி, தன்னந் தனியாய், பை நிறைய பணம் காசுடன் நடந்து வந்து க்ஷேமமாய் சேர முடியும் ! வழியில் யாதோர் பயமும் இராது.

" அன்பரே,

அதொரு பக்கம் இருக்கட்டும். இஸ்லாத்தின் போதனை பொது வானது; இக பர மிருலோகத்திலும் சாந்தியை யளிப்பது. லாயிலாஹ இல்லல்லாஹ் (நாம் வணங்குதற்குரிய தெய்வம் அல்லாஹ்வைத் தவிர வேறில்லை) என்று சொல்வதால், மனித சமூகத்துக்குக் கெடுதி யொன்று மில்லையே. அல்லாஹு அக்பர் (கடவுள் மகாப் பெரியவன்) என்று சொல்லுவதில் என்ன தீமை இருக்கிறது?

" அதீயே, யூதர்களின் நபியாகிய மூஸா (அலை) ஆண்டவனின் உண்மைத் தீர்க்கதரிசிதான். அவரைப் பின்பற்றிய யூதர்களே அவரை கை விட்டு விட்டார்கள். அவருடன் போட்டியிட்டுப் போராடினார்கள். இதே மாதிரி தான், கிறிஸ்துவர்களின் நபியாகிய ஈஸா (அலை) வும் உண்மைத் தூதர் தான். அவரையும் அவரது தோழர்கள் கை விட்டு விட்டார்கள். அவரை தேவகுமாரன் என்று சொல்லி, ஜனங்கள் வெறுக்கும் படிச் செய்து விட்டார்கள். இறுதியில் அவரை சிலுவை யில் அறைந்துக் கொன்றார்கள். ஆகையால், அன்பர் அதீயே, பரி பக்குவ மடைய முடியாத உங்கள் மார்க்கத்தை விட்டு, இஸ்லாத்தில் வந்து விடுவதால், எத்தனை நன்மைகள் இருக்கின்றன வென்று நன்றாய் யோசித்துப் பாருங்கள். இஸ்லாத்தில் பலவந்தம் கிடையாது. இஷ்டப் பட்டவர் இஸ்லாமை ஏற்கலாம். இஷ்டமில்லாதவர் ஏற்க வேண்டிய கட்டாயமில்லை. நன்றாய் ஆலோசித்துப் பதில் கூறுங்கள்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹாத்திமின் மகன் அதீக்கு, தீனுல் இஸ்லாத்தின் சிறப்புக்களை எடுத்துக் கூறினார்கள்.

## அதீ முஸ்லிமானார்.

அதீ சிறிது நேரம் மௌனம் சாதித்து தீர்க்காலோசனை செய்தார். திரு நபி (ஸல்) அவர்களின் இதோபதேசம் அவர் மனதில் இடம் பெற்று சுடர் விடச் செய்தது. அதீ, தன்னுடைய ஆசனத்தை விட்டு எழுந்து, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதார விந்தங்களைத் தொட்டு, கண்ணில் ஒத்திக் கொண்டார். உடனே அஷ்ஹது அன்லா யிலாஹ இல்லல்லாஹ்; வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல் லாஹ் என்று சொல்லி, மனப்பூர்வமாய் ஈமான் கொண்டு முஸ்லிமாய் விட்டார். இனி மேல் களவுத் தொழிலோ, பிறருக்கு துன்பம் தரும் ஈனச் செயலோ புரிவதில்லை யென்று தவ்பா புரிந்து, பிரதிக்ஞை செய்து கொண்டார்.

அல்ஹம்து லில்லாஹ்! இவ்வாறாக அரபு நாட்டு வள்ளல் ஹாத் திம் தையின் புத்திரியும் புத்திரரும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தின், நபித்திரு சமுகத்தில் ஈமான் கொண்டு முஸ்லிம்களாகி, ஸஹாபிகளாய்த் திகழ்ந்தார்கள். என்னே, இஸ்லாத்தின் சிறப்பு.

# தாரீகுல் குலபா

## இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரம்.

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாத்தின் ஆரம்பமும் இஸ்லாத்தை நிலைநாட்டிய தத்துவங்களும் இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும் இஸ்லாத்தின் சமத்துவங்களும் இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும், ஒருங்கே நிறைந் திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸிலிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதிற் முதற் பாகமாக நமது நபி பெருமானூர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 16-பேஜ் ஸைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1—8—0

ஷை இரண்டாவது பாகம்: இதில் ஹஜ்ரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்றும் பாகம்: இது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜரத் அலி (ரலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும், ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்று பாகமும் சேர்ந்தது. ரூ. 3—8—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இரத்தச் சின்னம்

## (தோடர் கதை 3—வது பகுதி)

### 5-வது அத்தியாயம்.

"அந்த மனிதன் இன்று காலை வருவதாகச் சொன்னனே, என் இன்னும் வரவில்லை ?" என்றார் பெர்ரி.

"எந்த மனிதன் ?" என்று டாம் கேட்டான்.

"ஹட்டனைப்பற்றி தான் சொல்லுகிறேன்" என்றார் அவர் தகப்பனார்.

"நேற்று பார்த்த தடித்த மனிதரா ?" என்று ஸிம்ஸன் கேட்டார்

அவர்கள் மெத்தையில் வராண்டாவில் நின்று கொண்டிருந்தனர். காலை டிரெயின் வந்து போனதும் மெத்தையிலிருந்து நன்றாகத் தெரிந்தது.

"ஆம். எதற்கும் கிரீனுக்கு போன் மூலம், இங்கு வர அவசியமில்லை என்று தெரிவித்து விடுகிறேன்" என்று பெர்ரி சொல்லிக்கொண்டே, தனது கன்னத்தை தடவியவாறு "ஹட்டனைப்பற்றி தகவல் சரியாகத் தெரியவில்லை. முன்பு திருடனாக யிருந்து இப்பொழுது நல்வழியில் திரும்பியவனைப்போல் தோன்றுகிறது. நேற்று எதனால் பயந்தான் டாம்! என்னிடம் வரும்போது அவன் முகம் செத்தவன் முகம்போல் தோன்றியது" என்றும் சொன்னார்.

"எனக்குத் தெரியவில்லை. ஏதாவது உடம்பு அசௌகரியமாக யிருக்கலாம். நெஞ்சில் ஏதாவது நோயின் காரணமாக திடீரென்று அலறியு மிருக்கலாம். இதைப்போல் தனக்கு அடிக்கடி ஏற்படுவதாக என்னிடம் தெரிவித்தார்" என்று டாம் சொன்னன்.

பெர்ரி இவ்விருவரைவிட்டு போன் செய்யச் சென்று சிறிது நேரத்தில் தனது கைக்கோலுடன் வந்து "டாம், கொஞ்சம் சுற்றிவரப் போகிறேன். நீ கூட வர வேண்டியதில்லை. சில விஷயங்கள் தனியாக சிந்திக்க வேண்டியதிருக்கின்றன. மிஸ்டர் ஸிம்ஸன்! நான் எனது நிலத்தைவிட்டு வெளியில் போகமாட்டேன். நீங்கள் திருட்டு கூட்டத்தின் மிரட்டலை மிக பெரிதாகப் பாராட்டுகிறீர்கள்" என்று பெர்ரி சொன்னார்.

"மரத்தின் பேரிலும் சிகப்பு வட்டம் வரையப்பட்டிருந்ததே !" என்று ஸிம்ஸன் சொன்னார்.

"இவ்வாறு வட்டம் வரைந்து விட்டால், என்னிடமிருந்து லக்ஷம் பவுண்டு சுலபமாக கிடைத்து விடுமா ?" என்று பெர்ரி ஏளனமாக சொல்லியவாறு அவர்களை விட்டு நடந்தார்.

"தகப்பனுருக்கு உண்மையாக அபாயம் வரக்கூடுமென்று நினைக்கிறீர்களா ?" என்று டாம் கேட்டான்.

பெர்ரி நடந்து போவதைப் பார்த்துக் கொண்டே யிருந்த ஸிம்ஸன், திரும்பி "அபாயமா ? ஆம். ஒன்றிரண்டு நாட்களில் அவருக்கு அபாயம் வரக்கூடுமென்று தான் நான் நினைக்கிறேன்" என்று பதில் சொன்னார்.

டாம் கலவரத்துடன் தகப்பனர் சென்றதிக்கை நோக்கியவாறு "தகப்பனர் இதைப்பற்றி கவலைப்படுவதாக தெரிவில்லையே! அபாயம் யாதும் வாராதிருப்பது நலம்" என்றான்.

"உன் தகப்பனுருக்கு இரத்த சின்ன சங்கத்தைப்பற்றி தெரியாது. அவரும் போலீஸ் இன்ஸ்பெக்டர் பென்டனிடமும் கலந்து இவ்விஷயத்தைப்பற்றி பேசியிருக்கிறார். அந்த இன்ஸ்பெக்டரும் அபாயம் வரக்கூடுமென்று தான் சொன்னாராம்" என்று துப்பறிபவர் சொன்னார்.

டாம் உள்ளுக்கு பயம் இருந்தும் சிரித்தவாறு, "போலீஸூம் துப்பரிபவரும் எப்பொழுதும் எந்த விஷயத்திலும் ஒத்துப்போவதேயில்லை ?" என்று கேட்டான்.

"இன்ஸ்பெக்டர் பென்டன் மிக கெட்டிக்காரர். அவர் எதையும் மெதுவாக செய்தாலும் தீர ஆலோசித்து ஒழுங்காக செய்வார். போலீஸில் அவர் பேச்சுக்கு மிக மதிப்பு யிருந்தது. தற்போது இந்த இரத்த சின்ன சங்கம் வந்தபின் தான் அவருக்கு கொஞ்சம் மதிப்பு குறைவு. போலீஸில், அவரை, இந்த இரத்த சின்ன சங்கத்தை பிடிக்க முடியாவிடில் வேலையை ராஜினாமா செய்துவிட்டு போகுமாறும் சொல்லி விட்டதாகக் கேள்வி" என்று ஸிம்ஸன் சொல்லிக் கொண்டிருக்கும்போது, நடந்து சென்ற பெர்ரி இவர்கள் கண்களுக்கு மரஞ்செடிகளினுல் மறைக்கப்பட்டு, செல்வதை பார்க்க முடியாமலாயிற்று.

"நான் சென்ற இரத்த சின்ன கொலை கோஸைப்பற்றி விசாரணையை பென்டனுடன் கலந்து செய்தேன். அப்பொழுது தான் அவரின் திறமையை அறிந்தேன்" என்று சொன்ன ஸிம்ஸன் திடீரென்று பேச்சை நிற்பாட்டினர். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தார். துப்பாக்கி உபயோகித்த சப்தமொன்றை இருவரும் கேட்டனர். உடனே டாம் பாய்ந்து ஓடினன் தகப்பனர் சென்ற திக்கை நோக்கி. பின்னுல் ஸிம்ஸனும் ஓடினர்.

சிறிது தூரத்தில் பெர்ரி குப்புற விழுந்து இறந்து கிடந்ததை பார்த்தான் டாம். இவன் தகப்பனுரை திகைப்புடன் பிரமித்து பார்த்துக் கொண்டிருக்கும் சமயத்தில், கொஞ்ச தூரத்தில் ஒரு பெண் ஓடிக் கொண்டிருந்தாள். ஓடும் போது நடுவில் கீழிருந்து கொஞ்சம் பில்லைப் பிடுங்கி தனது கையிலுள்ள ஏதோ சிகப்பு சாயத்தை துடைத்தவாறே ஓடினுள்.

குலோரியா தனது யிருப்பிடத்தை அடையும் வரை திரும்பிப் பார்க்கவே யில்லை. அவளுக்கு முகம் வெளுத்து விட்டது. பெரு மூச்சு விட்டுக் கொண்டே தன் வீட்டு வாயலிலிருந்து திரும்பி அக்கம் பக்கம் பார்த்தாள். பிறகு வீட்டினுள் புகுந்து தரையில் ஓரத்தில் போடப்பட்ட பலகையை தூக்கினுள். கீழே ஒரு பள்ளமிருந்தது. அதில் தனது கையிலுள்ள துப்பாக்கியை எறிந்தாள். பழைய மாதிரி மேலே பலகையை மூடினுள்.

## அத்தியாயம் 6

போலீஸ் கமிஷ்னர் தன் முன் வைக்கப்பட்ட தினசரி பேப்பரைப் பார்த்தவாறு தனது மீசையை முறுக்கிக் கொண்டிருந்தார். இதை எதிரே நின்று பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் பென்டன், கமிஷ்னர் மனதில் இன்று கோபமும் கலவரமும் கலந்திருப்பதை யறிந்தார்.

கமிஷ்னர் மிக குட்டையானவர்; வயது 50-க்கு குறைவே ; அவர் முகத்தில் புத்திசாலிக்குரிய அறிகுறியாதும் இல்லை. முகமும் பார்ப்பதற்கு அழகுடைய தல்ல.

கமிஷ்னர் தன் முன்னுள்ள தினசரி பத்திரிகையை எடுத்து "இதைக் கேள்" என்று படிக்கத் துடங்கினுர்.

"இவ்வருடத்திலேயே இரண்டாவது முறை ஒரு பிரபல்ய மனிதர் கொலையுண்டார். இதைக் கேட்ட நமது ஊரே அலறியது. அவர் எப்படி கொலையுண்டா ரென்று விபரம் இங்கு குறிக்க வேண்டியதில்லை. இன்னெரு பக்கத்தில் இரத்தச்சின்ன சங்கத்தின் கொடூர செயல்களைப் பற்றி விபரித்துள்ளோம். இக்கூட்டத்தைப் பிடித்து, இக் கொடூர அக்ரம செயல்களை தடை செய்ய நமது போலீஸால், முக்கியமாக சென்ற ஒரு வருஷமாக இதற்காக பாடுபட்டு முயற்சித்துவரும் இன்ஸ்பெக்டர் பென்டனுல் முடியவில்லை என்றே சொல்ல துணிகிறேம். இதனுல் தற்போது போலீஸ் உத்தியோகத்திலுள்ளவர்களின் சக்தி குறைவைப் பற்றி சந்தேகமே யில்லை. ஆதலால் அதில் முக்கியமான பதவியிலுள்ள முதியோர்களை நீக்கி, புது வாலிபர்களை அந்த ஸ்தானத்தில் போட்டு, இக் கொடூர கூட்டத்தின் நட

வடிக்கைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி போட கவர்ன் மெண்ட் தயங்க மாட்டார்க ளென்று கருதுகிறோம்" என்ற தலையங்கத்தைப் படித்தார்.

"பென்டன் இதைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்று போலீஸ் கமிஷ்னர் ஹன்டர் கேட்டார்.

பென்டன் தனது கன்னத்தை தடவியவாறு, ஒன்றும் பதில் சொல்ல வில்லை.

"போலீஸ்களுக்கு தெரிவித்தபின் பெர்ரி கொல்லப் பட்டார். அவரை கொல்லப் போவதாக நமக்குத் தெரியும். அப்படி யிருந்தும் அவர் வீட்டுக் கருகேயே கொல்லப் பட்டிருக்கிறார். உன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதனால் இந்த பத்திரிகையிலுள்ள தலையங்கத்தை ஒத்து, அதன்படி நடக்கலா மென்பது எனது எண்ணம்" என்று கமிஷ்னர் சொல்லிக் கொண்டே, தனது கையிலுள்ள பென்சிலினால் மேஜையை தட்டிக் கொண்டிருந்தார். பிறகு, "முந்திய கொலை கேஸிலும், கொலை செய்தவனைப் பிடிக்கும் பெருமையை ஸிம்ஸன் அடைந்தார். அவரையாவது பார்த்தீரா?"

"ஆம்" என்று தலையை அசைத்தார் பென்டன்.

"அவர் என்ன சொல்லுகிறார்?"

"யாரோ கருப்பு மனிதனும்! அவன் பல் வலியுடையவனும்! என்று என்னென்னமோ பிதற்றுகிறார்"

"இதை எப்படி கண்டு பிடித்தாராம்?" என்று கமிஷ்னர் கேட்டார்.

"பெர்ரியைச் சுட்ட துப்பாக்கி ரவையின் மூடி அங்கு கிடந்ததாம். அதைப் பார்த்ததும் அவர் இவ்வளவும் சொல்லுகிறார். அவர் உளறு வதில் நான் கவனம் செலுத்துவதில்லை" என்று பென்டன் பதிலளித் தார்.

"எது பிரயோஜனமான விஷயமோ, அதில் கவனம் செலுத்துவ தில்லை போலும். உங்களுக்கு ஸிம்ஸன் பேரில், வெறுப்பு என்? அவருக்கோ அபார பிரத்யேக சக்தி யிருக்கிறது அவர் சொல்வதைப் பற்றி பொறுமை யிருந்தாலும் அவர் சொல்வதைக் கொண்டு நீ பிரயோ ஜன மடையலா மல்லவா?" என்று கமிஷ்னர் சொன்னார்.

"என்ன ஸார் சொல்லுகிறீர்கள்! ஒரு மனிதன் ஒரு துப்பாக்கி யின் ரவையின் மூடியை கையில் வைத்து பார்த்தவுடன், அதைக் கடைசியாக தொட்டவன் எவன்? அவன் நிறம் என்ன? அவனுக்கு ஏதும் வலி யுண்டா? இவையெல்லாம் எப்படி ஸார் தெரியும்? இதில் நம்பிக்கையே யில்லை"

"அவ்வாறு சொல்லாதீர். சிலர் தனது மனசக்தியை கைவசப் படுத்தி, பழகி அதைக்கொண்டு, கண்டுபிடிக்க முடியாத விஷயங்களை யெல்லாம சொல்லுகிறார்கள். அதில் சேர்ந்தவர் இந்த ஸிம்ஸனும்" என்று கமிஷ்னர் ஸிம்ஸனைப் புகழ்ந்தவாறு சொன்னார்.

"இக்கொலை நடந்த யிடத்திலிருந்து சுமார் 100கஜ தூரத்தில் டாமுடன் இந்த ஸிம்ஸனும் கொலை நடக்கும்போது யிருந்திருக்கிறார். அப்படியிருந்தும் கொலைசெய்தவனை அவர்பிடிக்கவில்லை" என்று பென்ட்டன் பதில் சொன்னார்.

"நீ மாத்திரம் பிடித்தாயோ? சென்ற ஒரு வருடமாக ஏதோ பிளான் போட்டு இரத்த சின்ன சங்கத்தையே பிடித்து சுருட்டுவதாக சொன்னீர், நானும் ஆமோதித்தேன். உன்பிளான்படி என்ன நடந்தது? ஆதலால் நீ போகும் வழி தவறு. வழியை மாற்று" என்று கமிஷ்னர் சொன்னார்.

பென்டன் அதற்கு யாதும் பதில் சொல்லாமல் ஏதோ யோசித்துக்கொண்டே நின்றார். திடீரென்று பக்கத்திலிருந்த நாற்காலியை மேஜையினருகே இழுத்துப்போட்டு அதில் உட்கார்ந்தார். "மிஸ்டர் ஹன்டர்! நான் ஒன்று சொல்லப்போகிறேன். கவனமாய் கேளுங்கள்" என்று முன்பக்கம் மேஜையின்பேரில் சாய்ந்தார். தனது முன் இது வரை இவ்வாறுதான் சொல்லாமல் உட்காராத பென்டன் இன்று தனது உத்திரவில்லாமல் ஒரு நாற்காலியில் உட்கார்ந்ததைப் பார்த்தும் ஆச்சரியமாகி என்னச்சொல்லப் போகிறார் என்று கவனித்தார்.

"இரத்த சின்ன சங்கத்தைப் பிடிப்பது சுலபம். சில தினங்களுக்குள் அதில் சேர்ந்தவர்களைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் நான் பார்ப்பது அந்த இரத்த சின்ன சங்க வண்டியின் இருசு. அந்த இருசைப் பிடித்து எடுத்துவிட்டால் மொத்த வண்டியே யில்லாமலாகி விடும். அவ்வாறு நான் செய்ய, எனக்கு தற்போதுள்ள அதிகாரத்தை நீங்கள் அதிகமாக்க வேண்டும்" என்றார் பென்டன்.

"அதிக அதிகாரமாக? சொல்லுவது விளங்கவில்லையே" என்று ஆச்சரியத்துடன் கமிஷ்னர் கேட்டார்.

"விளங்கச்சொல்கிறேன்" என்று பென்டன் தனது மனதிலுள்ள விஷயங்களை கமிஷ்னருக்கு விபரித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டார். பென்டன் சொல்லியவைகளைக் கேட்ட கமிஷ்னர் அசைவற்று யோசனையிலாழ்ந்தார்.

காமிஷ்னர் ஆபீஸிலிருந்து புறப்பட்ட பென்டன், பட்டணத்தின் நடுவிலுள்ள ஒரு சிறிய ஆபீஸுக்கு சென்றார். மூன்றாவது மெத்தையிலுள்ள அந்த ஆபீஸில் இவர் வருகையைப் பார்த்துக்கொண்டிருந்த

18032

ஸிம்ஸன் "வாரும்! கமிஷ்னருடன் சந்திப்பு எவ்வாறிருந்தது?" என்று கேட்டார்.

"சந்தோஷத்தைத் தரக்கூடியதல்ல. அவருக்கு என்பேரிலிருந்த பிரியம் குறைந்துவிட்டது. சரி! நீங்கள் ஏதும் கண்டுபிடித்தீர்களா?" என்று பென்டன் கேட்டார்.

"பல்வலியுடைய கொலையாளியைக்கண்டு பிடித்தேன். அவன் பெயர் சார்லி. அவன் கப்பலில் வேலை செய்பவன். பெர்ரி வீட்டினருகே நடமாட பார்த்ததாக கேள்வியும் பட்டேன். நேற்று" என்று சொல்லிய வாறு முன்னுள்ள தந்தியைப் பார்த்து, "ஏதோ குடித்து ஆடியதாக பிடிக்கப்பட்டு யிருக்கிறான். அவன் வசம் ஒரு கைத்துப்பாக்கியும் இருந்ததாம். அந்த துப்பாக்கியாலேயே பெர்ரி கொல்லப்பட்டிருப்பா ரென்று நினைக்கிறேன்" என்று ஸிம்ஸன் சொன்னார்.

இவைகளையெல்லாம் ஆச்சரியத்துடன் கேட்ட பென்டன் "எப் படி இவ்வளவும் கண்டு பிடித்தீர்கள்?" என்று கேட்டார்.

"எனது சக்தியைக் கொண்டு கண்டுபிடித்துச் சொல்வதில் உங்க ளுக்கு நம்பிக்கையில்லையே!" என்று சிறித்துக்கொண்டே ஸிம்ஸன் சொல்லி, "துப்பாக்கி ரவையின் மூடியை கையில் வைத்து பார்த்த வுடனேயே, அதை கடைசியாக வைத்திருந்த மனிதன் என் கண்முன் தெரிகிறான். உடனே எனது ஆளை அனுப்பி விசாரிக்க செய்ததில் அவ்வளவும் அறிந்தேன்" என்றார்.

"பிடிக்கப்பட்டுவிட்டான்! அவன் இதை எழுதியிருப்பானா?' என்று பென்டர் சொல்லி, தனது ஜேபியிலிருந்து டைரியை எடுத்து அதினுள்ளிருந்து ஒரு சிறிய துண்டு காகிதத்தை எடுத்துக்கொடுத்தார். அந்த காகிதத்தின் ஓரமெல்லாம் கருப்பாக, நெருப்பிலிருந்து எடுக்கப் பட்டதுபோல் தோன்றியது.

"இதை எங்கிருந்து எடுத்தீர்கள்?" என்று ஸிம்ஸன் கேட்டார்.

"பெர்ரி வீட்டிலுள்ள நெருப்பு சாம்பலிலிருந்து எடுத்தேன்" என்றார் பென்டன்.

அந்த காகிதத்தில் "நீ மாத்திரம்.......நான்மாத்திரம்......2-வது கட்டு" என்று சைபட எழுதியிருந்தது.

"ஒன்றும் விளங்கவில்லையே" என்று ஸிம்ஸன் சொல்லிக் கொண்டே அதை தனது உள்ளங்கையில் வைத்து கவனித்தார். "ஒன்றும் தெரியவில்லை. நெருப்பில் இந்த காகிதம் எறிந்ததால் இதன் மணம் போய்விட்டது" என்றார். அதை பென்டன் திருப்பி வாங்கி தனது டைரியில் பத்திரமாக வைத்துவிட்டு "இன்னென்று சொல்ல

மறந்து விட்டேன். பெர்ரி வீட்டினருகே நீளமான பூட்ஸ்களை அணிந்த மனிதன் ஒருவன், சுருட்டு பிடித்துக்கொண்டிருந்திருக்கிறான். பூச் செடிகளின் பக்கத்தின் காலடிகளையும், சுருட்டு சாம்பலையும் பார்த்தேன்'' என்றார்.

“வீட்டினருகேயா?'' என்று திடுக்கிட்டு ஸிம்ஸன் கேட்டார்.

“ஆம். யாரோ ஒருவன் பெர்ரிக்கு அபாயம் வருவதை எச்சரிக்க இக்கடிதத்தை எழுதி, இருட்டியபின் பெர்ரி வசம் கொடுத்திருக்கலாம் என்று அபிப்பிராயப் படுகிறேன். பெர்ரி அதைப் படித்தபின் நெருப்பில் எறிந்திருக்கலாம். வேலைக்காரர்கள் நெருப்பின் சாம்பலை போடும் யிடத்தில் நான் இதைக் கண்டுபிடித்தேன்'' என்று பென்டர் சொல்லும் போது கதவு தட்டும் சப்தம் கேட்டது.

“டாம் வருவதாகத் தெரிகிறது'' என்றார் ஸிம்ஸன்.

டாம் உள்வந்ததும் ஸிம்ஸனைப் பார்த்து “ஏதாவது கண்டு பிடித்தீர்களா?'' என்று கேட்டுக்கொண்டே, பென்டன் பக்கம் திரும்பி “மிஸ்டர் பென்டன், நேற்று எங்கள் வீட்டிற்கு வந்தீர்களே, ஏதும் கண்டுபிடித்தீர்களா?'' என்று கேட்டான்.

“முக்கியமானதாக ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை'' என்று பென்டன் பதிலளித்தார்.

“கொஞ்சமுன்பு மிஸ்டர்கிரீனைப் பார்க்கச் சென்றேன். அவரிடம் ஏதும் பேச முடியவில்லை. அவர் பயந்து நடுநடுங்கிக் கொண்டிருக்கிறார்'' என்று டாம் சொன்னானே தவிர, தான் அங்கு சென்றது குலேரியாவைப் பார்க்கவென்றும் அவளை பார்க்க முடியவில்லையென்றும் சொல்லவில்லை. ஆனால் டாம் சொன்னதைக் கேட்ட இருவரில் ஒருவர் டாம் அங்கு சென்ற காரணத்தை அறிந்திருந்தார்.

ஸிம்ஸன் கொலையாளியைப் பிடிக்கப்பட்டதைப் பற்றி டாமிடம் சொல்லி, “இதனால் இரத்தசின்ன சங்கத்தை பிடித்துவிட்டோமென்று எண்ணமுடியாது. இவனே கொன்றிருந்தாலும் இவன் ஒரு அங்கத்தினராக யிருக்கக்கூடும். முன் நடந்த கொலை விஷயமாகவும் கொலை செய்தவனைப் பிடித்தோமேயல்லாது அதற்குமேல் ஒன்னும் செய்ய முடியவில்லையே!'' என்றும் சொன்னார்.

பிறகு மூவரும் அங்கிருந்து பிறப்பட்டு நடந்தனர். டாம் தனது சொத்துகளின் விஷயமாக, தங்களது வக்கீலை பார்க்கவேண்டிய திருந்தது. மற்ற இருவரோ கொலையாளியை பிடித்து வைத்திருக்குமிடத்

திற்கு போகலா மென்று ரெயில்வே ஸ்டேஷனை நோக்கிச் சென்றார்கள். டாமும் கூடவே சென்றான். திடீரென்று "ஆ!" என்றான் டாம். இவர் நடந்துபோகும் எதிர்வாடையில் சாமான்களை அடமானம் ஏற்கும் கடையிலிருந்து ஒரு பெண் வெளி வந்தாள்.

"ஆஹா! இவள் இரண்டு வருஷமாக என் கண்ணிலேயே அகப் படவில்லை" என்று பென்டன் ஆச்சரியத்துடன் சொன்னார்.

இதைக் கேட்ட டாம் பிரம்மிய்யடைந்தவாறு "யாரைச்சொல் கின்றீர்கள்? அந்த பெண்ணையா?" என்று கேட்டான்.

"ஆம்! அந்த குலோரியாவைதான் சொல்கிறேன். அவள் ஒரு திருடி; திருட்டுக்கூட்டத்தைச் சேர்ந்தவள்" என்றார் பென்டன்.

(தொடரும்.)


## சைதத்துப் படைப்போர் வசன காவியம்.

இது ஹஜ்ரத் அமீறுல் முஃமினீன் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரர் அப்துல் றஹ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமீர் சுபியான் என்னும் ஒரு அரசனோடு வெகு சாமார்த்தியத்துடன் யுத்தஞ் செய்து அவனுடைய மகளாகிய செய்தத்துவை கலியாணஞ் செய்து மதீனத்துக்கு வந்தது முதலிய விஷயங்கள் நிரம்பியுள்ள ஒரு அற்புதமான கிரந்தமாகும். இதை வாசிக்கவும் கேட்கவும் வெகு இன்பகரமா யிருக்கும். இதைப் பற்றி நிரம்பச் சொல்ல வேண்டியதில்லை. இதானது மலையாளம் குஞ்சு மூசாப் புலவர் அவர்களால் செய்துள்ள செய்யிதத்துப் படைப் போர் என்னும் காவியத்தையே வசன ரூபமாகச் செய்யப் பட்டது.

வசனம் விலை அணா. 12

ஷை பாடல் விலை அணா. 12

கிடைக்குமிடம்:-

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா

## அவர்களின் சரித்திரச் சுருக்கம்.

(அய்யம்பேட்டை, S. அப்துர் ரஜாக் ஸாஹிப்.)

## (5—வது பகுதி)

### ஹஸ்ரத் நத்ஹர்வலி அவர்களின் இலங்கைப் புறப்பாடு.

ஹஸ்ரத் நத்ஹர்வலி, தமது இலங்கைப்பிரயாண ஆவலைப்பற்றி தம் தோழர்களுக்குச் சொன்னபோது அவர்களும் தயாராகிவிட்டனர்.

அரும்பெரும் கஷ்டத்திற்குப்பின்னர், இலங்கையை அடைந்து நேரே ஹஸ்ரத் ஆதம் (அலை) மலைக்குப்போயினர்.

ஹஸ்ரத் ஆதம், இம்மலையின்மீது 40 நாள்வரையில் சில்லாகஷி அதாவது அல்லாஹ் உடைய ஜெபதங்கள் செய்து வந்ததாக சொல்லப் பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் நத்ஹர் வலி அவர்களும் சில நாட்கள் அம்மலையில் தங்கியிழிந்தபோது ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களின் ஆத்ம சந்திப்பை அடைந்தார்கள்.

ஹஸ்ரத் ஆதம் (அலை) நத்ஹர்வலியைக் கண்டதும் ஸலாம் சொல்லி அவர்களை ஆசிர்வதித்தபின், அவர்கள் அஞ்ஞானத்தை ஒழிப்பதில் அரும்பாடு பட்டதைக்குறித்தும் சிலாகித்துப் பேசினார்கள்.

அப்பால், அவர்கள் (நத்ஹர்வலி) திருச்னுப்பள்ளிக்கே போய், அங்கேயே என்றைக்கும் தம் இருப்பிடத்தை நிலைப்படுத்திகொள்ள வேண்டும் என்றும், அவர்கள் பெயர், அவர்களின் பரோபகாரத்தின் பொருட்டு இறுதிநாள்வரையில் உலகில் நற்கீர்த்தி யடைந்து வரு மென்றும் முன்னறிக்கை செய்தார்கள்.

### ஹஸ்ரத் நத்ஹர்வலிக்கு "தப்லே ஆலம்" என்று சொல்லுவதன் காரணம்

ஹஸ்ரத் நத்ஹர்வலி, ஹஸ்ரத் ஆதம் (அலை) இவ்விருவர்களுக் கிடை சப்பாஷணை நடந்து கொண்டிருக்கையிலே, நகருக்குள் ஆறு உடைப்பெடுத்து, வெள்ளம் புரண்டுவருவதாயும், நகர மக்கள் அநேகர் உயிர்துறந்தும் அலமலர்ந்து கூக்குரலிடுவதாயும் கலந்தர்

பகீர் ஒருவர் ஓடிவந்து ஹஸ்ரத் நத்ஹர்வலிக்கு அறிவித்தார். அச்சமயம் மழையும் தூறிக் கொண்டிருந்தது. வெள்ளத்தின் அபாயகரமான நிலைமையை செவியுற்ற ஹஸ்ரத் வலி, உடனே தம் நகரா (பறை) வை கொண்டு வரும்படி உத்தரவு செய்தார்கள்.

நகரா, வந்ததும் அதை இரண்டுகோல்களினுல் பலமாய் அடித்தார்கள். ஹஸ்ரத் நகராவை அடிக்கயடிக்க வெள்ளம் குறைந்து கொண்டேபோய் விட்டது. மக்களின் அலட்டி நீங்கி, அவர்கள் நிம்மதியடைவதைக்கண்ட ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களின் புனித ஆத்மா, நத்ஹரை நோக்கி அன்பனே! நீ "தப்லே ஆலம்" (உலகப் பறை) என்று பட்டமளித்தது.

ஹஸ்ரத் நத்ஹர் ஆதம் (அலை) அவர்களுக்கு நன்றிபாராட்டி திருச்சிக்கு திரும்பி வந்தார்கள். அவர்கள் இங்கு வந்தவுடன் தம் தோழரான கலந்தர் ஒருவரிடத்தில் நாம் 5 வருஷகாலமாக இந்த மலையில் வசித்து வருகிறோம். இனி மலையைவிட்டு தரையில் வசிக்க நான் பிரியப்படுகிறேன். அதற்கான ஏற்பாடு விரைவில் செய்துவிடும் என்றார்கள். இதைக் கேட்டுள்ள கலந்தர், பலவாறு யோசித்து அங்கு அக்காலத்தில் பிரசித்திப்பெற்றிருந்த 'தாய்மான் சுவாமி' என்பவரிடம் போய் கலந்தர் பகீர் கோஷ்டி யாருக்கு ஜாகை யொன்றை நிர்ணயித்துக் கொடுக்கு மாறு கோரியபோது, 'தாய்மான்சுவாமி' வளையமொன்றை தயாரித்துக் கொடுத்து அதை மலை மீதிலிருந்தே வீசியெறியுமாறு சொல்லி, அந்த வளையம் எங்குபோய் விழுகிறதோ அங்கேயே நீங்கள் உங்கள் ஜாகையை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்றார். அதன்படி செய்தபோது அவ்வளையம் 'தாய்மான் சுவாமி' உடைய கோயிலின்மீது போய் விழுந்தது. எனவே 'தாய்மான் சுவாமி' அந்த இடத்தை ஹஸ்ரத் நத்ஹர் வலிக்குவிட்டு விட்டு தாம் மலை வாசத்தை ஏற்படுத்திக் கொண்டாறென சொல்லப்பட்டிருக்கிறது.

### ராஜனுக்கு சந்ததி பாக்கியம்.

### ஹஸ்ரத் நத்ஹர் வலி அருள்.

அக்காலத்தில் திருச்சி ராஜாவுக்கு சந்ததி இல்லாததின் பொருட்டு அல்லும் பகலும் அதே துக்கத்தில் ஆழ்ந்திருந்தார். ஹஸ்ரத் அவர்களின் ஆசிர் வாதத்தினுல் அவருக்கு 2 குழந்தைகள் பிறந்தன. அவற்றுள் ஆண் 1, பெண் 1.

பெண் குழந்தைக்கு சரீர முழுவதும் கை கால் இல்லாது, அது ஒரே பிண்டமாக இருந்தது. அதை ஹஸ்ரத் அவர்களிடம் கொண்டு வந்தபோது, அவர்கள் அதன்மீது மந்தரித்து தண்ணீர் தெளித்தார்கள். உடனே அது சீர்பட்டது.

ஹஸ்ரத் வலி அவர்கள் ராஜனுக்கு சந்ததிக்குரிய அருள் புரியு முன் பிரதம வாக்கொன்றை அவரிடமிருந்து வாங்கிக் கொண் டார்கள். அதாவது, "ராஜனுக்கு சந்ததி வேண்டுமாயின் அவர் ராஜாங் கத்தை இழந்துவிட நேரிடும்" என்று. ராஜாவும் அதற்கு இணங்கி யுள்ளார்.

இது இவ்வாறிருக்க, பெண் குழந்தையின் பிண்டத்தின் மேல் ஹஸ்ரத் தண்ணீர் தெளித்த போது அது சிர்பட்டு விட்டதென மேலே கூறப்பட்ட தல்லவா? அக்குழந்தை ராஜனிடம் போனதும் தன் உடல் ரூபத்தை மீண்டும் முன்போல் மாற்றிக் கொண்டது.

குழந்தையை அடிக்கடி மந்திரிக்கும்படி நேர்ந்த தொந்தரவினுல் ஹஸ்ரத் நத்ஹர் வலி அவர்களுக்கு அளவு கடந்த ஆத்திர மேற் பட்டது. அதன் பயனுக ராஜன் ஊரில் கல் மழை பெய்யத் தொடங் கிற்று. ராஜா அதைக் கண்டு பயந்து தன் யானையின் மேல் இராணியை யும் ஏற்றிக் கொண்டு வேறு யாதொரு ஊரை நோக்கி புறப்பட்டார்.

வழியில் நதியொன்று குறுக்கிட்டது. யானை நதியில் இறங்கி சிக்குண்டபோது ராஜாவும் தடுமாறி நதியில் விழுந்து மாண்டார். இராணியையோ நதி ஜலம் அடித்துக் கொண்டு சென்றது.

இராணியை ஜலம் அடித்துச் சென்ற போது சொற்ப தூரத்தில் ஓர் பிராமணர் அதே ஆற்றில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தார். அவர் அருகில் இராணியை ஜலம் அடித்துக் கொண்டு போனது. அவர் உடனே அவரை இழுத்து கரை யேற்றினுர். அது சமயம் இராணி பிரக்ஞை யற்றிருந்தார். பிரக்ஞை வந்ததும் பிராமணர் அவரை தம் வீட்டிற்கு அழைத்து வந்தார்.

அந்த பிராமணர் ஜோதிடர். ஆதலால் அவர் இராணியிடம் "அம்மா! உங்களுக்கு 2 மாத கர்ப்பம் தரித்திருக்கிறது. உங்களுக்கு பிறக்கப் போவது ஆண் குழந்தை. அக்குழந்தை ஏழாவது பிரா யத்தை அடைந்ததும் தன் தகப்பனின் சிம்மாசனத்தை அடையும்" என்று விவரித்தார். அதே போல் ஒன்பது மாத காலம் ஆனதும் இராணிக்கு ஆண் குழந்தை பிறந்தது. தாய் அதற்கு 'ஹரீ கால்' என பெயர் வைத்தார். அப்படியும் இப்படியுமாக அக்குழந்தை 7வது பிராயத்திற்கும் எட்டியது.

நிலைமை இவ்வாறிருந்து வருகையில், அங்கு ராஜா ஆற்றில் விழுந்தி இறந்து போனதற் கப்பால் ராஜ பரிபாலனத்தை குடி ஜனங் களினுல் சரிவர கொண்டு நடத்த முடியாமற் போய் விட்டது. கடைசி யாக அவர்கள் எல்லோருங் கூடி ஹஸ்ரத் வலியின் ஆலோசனைப்படி நடக்க வேண்டும் எனத் தீர்மானித்தார்கள்.

ஹஸ்ரத் அவர்களிடம் போய் விஷயத்தை சொன்ன போது ஹஸ்ரத் அவர்கள் ராஜாவின் குமாரத்தியாகிய 'மாமாஜிக்னி' யை அழைத்து "என் அருமை குழந்தாய்! உன் தகப்பன் சிம்மாசனத்தை இனி நீயே அடைந்து கொள்'' என்ற போது, குழந்தையான 'மாமாஜிக்னி' ராஜ பரிபாலனத்தை முற்றிலும் வெறுத்து விட்டது.

அதற்கப்பால், ஹஸ்ரத் நத்ஹர் வலி அவர்கள், பின் வரும் ஆலோசனையை தம்மிடம் வந்தவர்களுக்கு கூறினார்கள் :—

ராஜன் கழுத்தில் போடப்பட்டு வந்த நவரத்தினங்களின் மாலையை யானை எடுத்துச் செல்லட்டும். அது ஒவ்வொரு வரையும் தேடி யலைந்து பார்த்து யார் பட்டத்துக்கு தகுதியுள்ளவன் என்பதாக கண்டு பிடிக்கிறதோ அவன் கழுத்தில் யானையே அம்மாலையை போடட்டும். யானை யாருக்கு மாலை யிடுகிறதோ அவரையே ராஜா என தேர்ந்தெடுங்கள்.

'' குஜ்ராத் '' பெயரிடப்பட்டிருந்த யானையை இதற்காக தேர்ந்தெடுத்து அதற்கு உயர்ந்த போர்வையிட்டு, அலங்கரித்த பின் மாலையை அதன் தும்பிக்கையில் கொடுத்தார்கள்.

யானை தெருத் தெருவாகச் சென்றது. வாலிபர்களும் பெரியோர்களும் யானை அம்மாலையை தனக்கு போடாதா என்ற அவலாசையின் பேரில் யானையை அணுகி வந்தார்களாயினும், அது அவர்களை கவனியாது தம் வழியில் நடந்த வண்ணமா யிருந்தது.

இராணி அப்பிராமணர் வீட்டில் இருந்து வந்தார் என மேலே கூறப்பட்ட பிரகாரம் அச்சமயத்தில் ஏழு பிராயத்தி லிருந்த அரச குமாரன் 'ஹரீகால்' தற்செயலாக தெருவில் இதர பையன்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

யானை அவனைக் கண்டதும் அம்மாலையை அவன் கழுத்தில் சூட்டி விட்டது.

மாலை சூட்டப்பட்ட 'ஹரீகால்' அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதும் எல்லோரும் அவன் முகத் தோற்றத்தைக் கண்டதும் மிக்க சந்தோஷ மடைந்தார்கள். அவன் கட்டை விரலில் ஓர் மோதிரமும் அணிந்திருந்தான். அதில் அவன் தந்தை பெயர் (காலஞ் சென்ற ராஜாவின் பெயர்) செதுக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் பிரமுகர்கள் அவன் உண்மை சரித்திரத்தை விசாரித்து விளங்கிக் கொண்டார்கள். (தொடரும்.)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

187032

அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின்

மகனார்

## முஹம்மது ஹனீபாயுத்த சரித்திரம்.

இதில் ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா அவர்களின் தாயாராகிய ஹனீபா பீவியுடன் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் யுத்தஞ் செய்து ஜெயித்து, அவர்களை நிக்காஹ் செய்து விட்டுப் போனதும், பிறகு ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா பிறந்து தாயிடம் வளர்ந்து தமது பிதாவாகிய அலி றலியல்லாஹு அன்ஹுவைத் தேடிச்சென்று பிதாவென்று அறியாமல் யுத்தம் புரிந்தும், பிறகு ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா அவர்கள் பூத தேவுகளுடன் யுத்தம் புரிந்து, பீவி ஸைனுல் அறபை விவாகம் செய்ததும், ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களை எஸீது என்பவன் ஷஹீது செய்து, ஹஸ்ரத் இமாம் ஸைனுல் ஆபிதீன் அவர்களையும் ஹஸரத் நபி நாயகம் அவர்களின் வீட்டாரையும் சிறையிட்ட விஷயமாகத் தாங்கள் புறப்பட்டு போகும் போது உமர் அலி, தாலிப் அலி, ஆகில் அலி, முஸிப்காகான், இப்ருஹீம் உஷர்த்து, தோஹான் மோஹான் முதலிய பிரக்யாதி பெற்ற வீரர்களோடு மதீனமா நகரஞ் சென்று உத்பா வலீது என்பவர்களுடனும், மற்வானுடனும் எஸீதுடனும் பல ஊர்களில் பலவிதமாய் மகா வீரியத்துடன் அதிசயிக்கதக்க விதமாய் யுத்தஞ் செய்து எஸீதுடைய படைகளை முறிய அடித்தும் ஜெயித்தும், மற்வானுடைய மூக்கையும் காதையும் அறுத்தும் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுடைய பழிக்கு பதில் பழி வாங்கி சிறையை மீட்டியதும், ஹஜரத் ஸைனுல் ஆபிதீன் அவர்களைப் பட்டத்தில் உட்கார வைத்ததும், எல்லா அரசாங்கத்தையும் தங்களுக்குள்ளடக்கி ஆண்டதுமான எல்லா விஷயங்களும் மிக அருமையும் தெளிவாயும், எழுதப்பட்டிருக்கிறது.

புதிய பதிப்பு கலிகோ பைண்டு விலை ரூ. 3

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# கைத் தொழில் சம்பாதனை வழிகள்.

யூனானி வைத்திய முறைகளை எழுதிய அய்யம் பேட்டை S. அப்துல் ரஜாக் ஸாஹிப் அவர்களால் பல உர்து புத்தகங்களிலிருந்து மொழி பெயர்த்து எழுதப்பட்டது.

இந்த புத்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்களுள் சில :—ஹேர் ஆயில்கள், ஊதுபத்தி, அச்சாபீஸ் மைகறை எடுத்தல், அச்சாபீஸ் கல் பிளவு பட்டால், அத்தரும் மற்ற வாசனை திரவியங்கள் தயாரித்தல், தைலங்கள் தயாரித்தல், எஸ்ஸன்ஸ்கள் தயாரித்தல், நிறங்கள் தயாரித்தல், டின்க்சர்களும் ஸ்பிரிட்களும் தயாரித்தல், ஆரஞ்சு தோல் எக்ஸ்டிராட், ஆட்டுத்தோல் பதனிடுதல், இரும்பு பாலிஷ், இரும்பும் கல்லும் சேர்க்க சிமென்ட், மைகறைகள் அப்புறப்படுத்தல், இருளில் புலப்படும் எழுத்துக்களுக்குரிய மை, இயந்திர சலுஷன், இங்கிலீஷ் சோப் செய்தல், உயர்ந்த வார்னிஷ், உடைந்த கண்ணாடியை ஒட்டும் சிமென்ட், ரோம சங்காரி, ரோம சங்காரி சோப், உடைந்த கண்ணாடி மூலம் சம்பாதித்தல், உயர்ந்த கோந்து பசை, போமேட்கள் செய்தல், ஊறுகாய் நாள்பட கெடாதிருக்க, எழுதுவதற்கு சாக்பீஸ், எலுமிச்சம் பழம் கெடாதிருக்க, அதன் சாறு கெடாதிருக்க, ஐஸ்கிரீம் செய்தல், மரசாமான்கள் ஒட்டவைக்கும் சிமென்ட், கந்தக குவளை, கடுதாசி உறைகளை ஒட்டும் பசை, கஜூர் கொட்டையினால் பொத்தான்கள் செய்தல், இங்கிகள் செய்தல், கற்பூர கிளாஸ், கனிவர்க்கங்கள் கெடாதிருக்க.

கஸ்தூரி பில்லைகள், கஸ்தூரி எண்ணை, காடி தயாரித்தல், காடியை வெள்ளை நிறமாக்க, காசுகட்டி செய்தல், காஸனி வர்ணம் செய்தல், கிளிஸரின் சோப் செய்தல், கில்ட் வேலை சம்பந்தமானவை, கொசு, மூட்டை பூச்சி ஆகியவைகளை கொல்ல, சர்க்கரையில் விளையாட்டு சாமான் செய்தல், சரக்குகளின் சத்து எடுத்தல், சாயத் தொழில் கண்ணாடி மீது சித்திர வேலை செய்தல், ரோமங்களை கறுப்பாக்குதல், செம்பை வெள்ளி நிறமாக்குதல், செம்பை வெள்ளி பாத்திரங்கள் மீது எழுத்து வரைதல், பாலிஷ்கள் செய்தல், டூத்பேஸ்ட் பவுடர் செய்தல், தங்கமுலாம், தயிர் உடனே தயாரித்தல், தியேட்டர் ஆக்டர்களுக்கு முகவஜீகா பவுடர், தேன் தயாரித்தல், தேயிலை பில்லைகள், தோலை பதனிடுதல் சம்பந்தப்பட்டவைகள், சர்பத்து தயாரித்தல், சிசாவாய்களை அடைத்தல், புழு பூச்சிகளை கொல்லும் பவுடர், பென்சில் தயாரித்தல், பெப்பர்மின்ட் தயாரித்தல், போலி சாமான்கள் தயாரித்தல், மெழுகினால் பூ தயாரித்தல், யானை தந்தத்தை வளைத்தல், ரப்பர் ஸீல் தயாரித்தல், தாச்சினாப் பொடி செய்தல், ஸீல் வைக்கும் அரக்கு.

இது 224 பக்கங்களை கொண்ட, பெதர்வைட் பேப்பரில் அச்சிட்டு கலிகோ பைண்ட் செய்த புத்தகம் விலை ரூபா. 2–8–0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.